விலை: 30.00
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 19 வியாழக்கிழமை (01.04.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 103

ஜேர்மனி மற்றும் சுவிட்ஸர்லாந்திலிருந்து

## நாடு கடத்தப்பட்ட ஈழத் தமிழர்கள்

**தனிமைப்படுத்தல் முடிவடைந்தபின் இராணுவத்தினரிடம் ஒப்படைப்பு**

07ஆம் பக்கம் பார்க்க

## யாழில் மார்ச் மாதத்தில் மாத்திரம் 536 பேருக்கு கொரோனாத் தொற்று

### வடக்கு சுகாதார பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன்



(யாழ்ப்பாணம்)
யாழ்.மாவட்டத்தில் மார்ச் மாதத்தில் மாத்திரம் இதுவரை 536 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

19

யாழில் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது

# பண்டிகைக் காலத்தில் அவதானம் தேவை

### யாழ்.மாவட்ட அரச அதிபர் க.மகேசன்



*(யாழ்ப்பாணம்)*
**யாழ்.மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர் எண்ணிக்கை ஓரளவு ஆறுதலளிக்கும் வகையில் குறைந்துள்ள நிலையில் பண்டிகைக் காலங்களில் மக்கள் மிக மிக அவதானமாக இருக்குமாறு யாழ்.மாவட்ட அரச அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.**

சமகால நிலைமைகள் குறித்து நேற்று மாலை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதன்போது மேலும் அவர் கூறுகையில், மாவட்டத்தில் 3 ஆயிரத்து 329 பேர் தனிமைப் படுத்தி வைக்கப்பட்டுள்ளனர்.

19

## தண்ணீர் எடுக்க சென்ற பெண்

### மயங்கி விழுந்து மரணம்

(யாழ்ப்பாணம்)
தண்ணீர் எடுப்பதற்கு சென்ற பெண் ஒருவர் வீதியில் மயங்கி விழுந்து மரணமானார்.

புலோலி உபய கதிர்காமம் பகுதி

19

## எச்சரிக்கை




யாரும் உங்களை ஏமாற்றலாம்

## யாழில் மேலும் 38 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் மேலும் 38 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை நேற்று புதன்கிழமை கண்டறியப்பட்டுள்ளது என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன தெரிவித்தார்.

முல்லேரியா ஆய்வுகூடம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் யாழ்ப்பாணம் மருத்

19

யாழ்.வலய பாடசாலைகள்

## மறு அறிவித்தல் வரை மூடப்படுவதாக அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)
யாழில் அண்மைய நாட்களில் ஏற்பட்ட கொரோனாத் தொற்று பரம்பல் அதிகரிப்பை அடுத்து மூடப்பட்டிருக்கும் யாழ்.வலய பாட

19

## ஒரு கோடி பெறுமதியான போதைப்பொருளுடன்

### யாழில் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)
சுமார் ஒரு கோடி பெறுமதியான ஒரு கிலோகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மதுவரித் திணைக் களத்தின் சாவகச்சேரி

19

## மணிவண்ணனை முன்னணியிலிருந்து நீக்கும் மேன்முறையீட்டு மனு நீதிமன்றால் தள்ளுபடி

### முதல்வராக தொடர்ந்தும் மணிவண்ணன் நீடிக்கலாம்

(யாழ்ப்பாணம்)
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்.மாநகர சபை உறுப்பினர்கள் சிலரைக் கட்சியிலிருந்து விலக்கும் தீர்மானத்திற்கு வழங்கப்பட்ட இடைக்கால தடையை நீக்கக்கோரி, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் செய்த மேன்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.மாநகரசபை உறுப்பினர்கள் வி.மணிவண்ணன், பா.மயூரன் ஆகியோரை கட்சியிலிருந்து விலக்குவதாக அண்மையில்

19

மன்னார் பேசாலையில்

## ரூ.46 இலட்சம் பெறுமதியான கஞ்சா பொதிகள் மீட்பு

(மன்னார்)
மன்னார் பேசாலை பொலிஸ் பிரிவில் உள்ள 4ஆம் வட்டாரம் கடற்கரை பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதி கேரள கஞ்சா பொதிகளை பேசாலை பொலிஸார் நேற்று முன்தினம்

19

## கொரோனா 2 பேர் பலி

(கொழும்பு)
இலங்கையில் கொரோனா தொற்

19

## வெளிநாட்டிலிருந்து முறையற்ற பணம்

### யாழில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)
வெளிநாட்டிலிருந்து முறையற்ற வகையில் பணம் பெற்றதாகத் தெரிவித்து யாழ்ப்பாணத்தில் சந்தேக நபர் ஒருவர் நேற்றுப் புதன்

19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ். கோப்பாய் நாவலர் பாடசாலைக்கு அருகில் 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (நிலப்பரப்பு)

(தரகர் தேவையில்லை) (6417)

☎ - 077 814 7389



## பதவி வெற்றிடம்

### முகாமைத்துவ உதவியாளர்

(இருபாலாரும்)

**தகைமை**

- க.பொ.த உயர்தரம் கற்றிருத்தல்.
- 01.04.2021 இல் 25 வயது பூர்த்தியாகி இருத்தல்.
- யாழ். நகர மையத்தில் இருந்து 6 Km சுற்றளவிற்குள் நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்டிருத்தல்.

**மேற்குறிப்பிட்ட கட்டாய தகைமைகளுடன்**

- கணினி தமிழ் ரைப்பிங் தெரிந்திருத்தல்.
- ஆங்கிலம், சிங்களம் பேசும் ஆற்றல்

என்பன மேலதிக தகைமைகளாகக் கருதப்படும்.

தகைமையும் விருப்பமும் உள்ளவர்கள் சுயவிபரம் அடங்கிய (தொ.பே இலக்கம் உட்பட) விண்ணப்பத்தை,

**பொது முகாமையாளர்,**
**வலம்புரி,**
**இல. 3, 2 ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**

எனும் முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும்.

பொது முகாமையாளர்
வலம்புரி



## வகுப்பு

கணிதம் தரம் 9,10,11 மாணவர்களுக்கு யாழ். நகரில் உள்ள வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்பு (6397)

077 982 5241



## வேலையாள் தேவை

இயக்கச்சியில் அமைந்துள்ள ஒருங்கிணைக்கப்பட்ட பண்ணையில் வளர்க்கப்படும் கால்நடைகள் மற்றும் பண்ணை சம்பந்தமான வேலைகளுக்கு ஆள் தேவை

சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம்.

திறமைக்கும் ஊக்கத்திற்கும் வேலை திறன் நிர்வாக பொறுப்புக்கு ஏற்றவாறு மேலதிக ஊக்குவிப்பு பணம் வழுங்கப்படும்.

தங்குமிட வசதியுண்டு. உணவும் வழுங்கப்படும்.

சுயவிபரக் கோவை அனுப்ப
nishanthan3ds@gmail.com (6415)

தொடர்பு (viber & whatsup)

0773164480


## காணவில்லை



கொக்குவிலில் வசிக்கும் **கார்த்திகேசு லோகேஸ்வரன்** என்பவரை திங்கட்கிழமை காலையிலிருந்து காணவில்லை. சிறிது மனநிலை குன்றியவர். இவரைக் காண்பவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். (6416)

075 577 3428
077 869 3285

## யாழ். தீவு பகுதிகளுக்கு புதிய பேருந்துகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள தீவுப் பகுதிகளில் போக்குவரத்தை மேம்படுத்துவதற்காக புதிய பேருந்துகள் கொள்வனவு செய்யப்படும் என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம கூறியுள்ளார்.

இது குறித்து மேலும் அவர் கூறுகையில், தீவுப்பகுதிகளில் தற்போது மிகவும் பழைய பேருந்துகளே பாவனையில் உள்ளதாகவும், இதன்காரணமாகவே புதிய பேருந்துகள் கொள்வனவு செய்யப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த பேருந்துகள் நாட்டுக்கு கொண்டுவரப்பட்டதன் பின்னர் அவை வட மாகாணத்திலுள்ள தீவு பகுதிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் எனவும் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம சுட்டிக்காட்டியுள்ளார். (ம-03)

## யாழ். வாசிக்கு ஜக்பொட் பரிசு

(யாழ்ப்பாணம்)

மஹஜன சம்பத அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பின் மூலம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவருக்கு நேற்றைய தினம் ஒரு கோடியே 53 இலட்சத்து 28 ஆயிரத்து தொள்ளாயிரத்து 42 ரூபாய் அதிர்ஷ்டம் வெல்லப்பட்டுள்ளது. (ம-03)

## மரண அறிவித்தல்

தோற்றம்
03 . 03 . 1942



மறைவு
31 . 03 . 2021

### சுப்பிரமணியம் றோசம்மா

யாழ்ப்பாணம் உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் றோசம்மா நேற்று (31.03.2021) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - அம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் மேகலா, மோகனராசா, ஜெயராசா (இத்தாலி), கருணா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் பாலச்சந்திரன் (யாழ். போதனா வைத்தியசாலை உத்தியோகத்தர்), புஸ்பராணி, ஜெயந்தினி (இத்தாலி), நாகேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் கிரிஷாந் (பிரான்ஸ்), கோகிலா (பிரான்ஸ்), மதிஷாந், யதுஷன், நிதுஷன், றொஷான் (இத்தாலி), ஜெக்ஷிகா (இத்தாலி), மதுஷா (பிரான்ஸ்), நிருஷன் (பிரான்ஸ்), நிருஷா (பிரான்ஸ்), கீர்த்திகா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (01.04.2021) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று மாலை 3.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக உரும்பிராய் வடக்கு இருளன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (C-1857)

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

தகவல்: குடும்பத்தினர்

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

**வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகக் குழுத் தெரிவும்**

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகக் குழுத் தெரிவும் எதிர்வரும் 02.05.2021 (ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. அனைத்து பழைய மாணவர் சங்க அங்கத்தவர்களையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

புதிய நிர்வாகக் குழுவிற்கான வேட்புமனுப் பத்திரங்களையும் மேலதிக விபரங்களையும் எமது www.jhcobajaffna.com எனும் இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

அ. கஜேந்திரன்
செயலாளர்
JHC - OBA - 2020 / 2021 (C-1856) 01.04.2021

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவசித்தாந்த முதுகலைமாணி கற்கைநெறியின் வருகைதரு விரிவுரையாளர்



**அமரர்**
### தி.பொன்னம்பலவாணர்

அவர்கள் அமரத்துவமடைந்த செய்திகேட்டு ஆழ்ந்த துயரமடைந்துள்ளோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (6421)


சைவசித்தாந்த முதுகலைமாணி மாணவர்கள் அணி (4)
உயர் பட்டப்படிப்புகள் பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு ஆபத்து ஏற்படும் பட்சத்தில்
# இந்திய இராணுவம் களமிறங்கும்

(சென்னை)

**இலங்கையை சீனா எவ்வளவு பயமுறுத்தினாலும் இந்தியா அதன் பின்னணியில் எப்போதும் இருக்கும். ஏனெனில் இலங்கையை சீனா தாக்கினால் அது இந்தியாவிற்கு பேராபத்து என இந்தியாவின் மூத்த இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.**



மேலும் இலங்கைக்கு பாதிப்பான சூழ்நிலைகள் ஏற்படும் பட்சத்தில் இலங்கைக்குள் இந்திய இராணுவம் களமிறங்கும் எனவும் இந்தியாவின் மூத்த இராணுவ கேணல் தர அதிகாரி, ஹரிஹரன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் இராணுவ பிரசன்னம் அல்லது இராணுவ ரீதியான ஒரு நிலைப்பாடு இலங்கைக்குள் ஆழமாக இருக்கிறது. அதனால், எந்த நாடு அதற்குள் நுழைந்தாலும் எந்தப் பாதிப்பும் இல்லை என்று எடுத்துக் கொள்ளலாமா? என. அவரிடம் கேட்கப்பட்டது.

அதற்கு பதிலளித்த அவர்,

பாதிப்பு இல்லையெனக் கூறிவிட முடியாது. பாதிப்பு இருக்கும். ஆனால் அந்த பாதிப்பிற்கு இந்தியா உடனடியாக பதிலடி கொடுத்து தகர்க்க முடியும். இந்தியாவிடம் அத்தகைய வலிமை உள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

அதேபோல் இந்தியாவின் மீது தாக்குதல் நடந்தால் அது இலங்கையின் மீதும் ஓரளவு பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் எந்த நாடும் எப்போதும் வெளியுறவுச் செயற்பாட்டை ஒரே மாதிரி வைத்திருக்காது. அதேபோல் 80களில் இருந்த சூழ்நிலை தற்போது இல்லை. அப்போது பனிப்போர் நடைபெற்றுக்கொண்டிருந்தது. அந்த சூழ்நிலையில், சோவியத் ஒன்றியமும் அமெரிக்காவும் எதிர் எதிராக நாடுகளைத் திரட்டி உலகப் பாதுகாப்பு சூழ்நிலையை நிர்ணயித்தன.

அதேவேளை, இலங்கைக்கு ஒரு போர்க்கால சூழ்நிலை அல்லது ஒரு பேராபத்து சூழ்நிலை ஏற்பட்டால், இலங்கை கேட்டுக் கொண்டால், கட்டாயம் இந்தியா தனது இராணுவத்தை அனுப்பும் எனவும் தெரிவித்துள்ளார். (நி-4)

## இலங்கை ரூபாய் மேலும் வீழ்ச்சி

(கொழும்பு)

இலங்கை வரலாற்றில் அண்மைக் காலமாகத் தொடர்ந்து வீழ்ச்சி அடைந்து வரும் ரூபாயின் பெறுமதி மேலும் வீழ்ச்சியடைந்துள்ளது.

மத்திய வங்கி வெளியிட்ட நாணய மாற்று விகிதங்களின்படி அமெரிக்க டொலரின் விற்பனை விலை 202.04 ரூபாயாக அதிகரித்துள்ளது. இதேவேளை அமெரிக்க டொலரின் கொள்வனவு விலை 197.62 ஆக பதிவாகியுள்ளதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது. (நி-4)


அறுசுவை உணவகம் - விருந்தினர் விடுதி
ஈஸ்டர் கொண்டாட்டம் 10% கழிவு
சைவம் – அசைவம் பகல் – இரவு



தினமும் ஓடியற் கூழ்
பிரியாணி – பிறைட் றைஸ் – நூடில்ஸ்
உயர்தர பகல் சைவ – அசைவ
சோறு கறி, இரவு கொத்து – பிட்டு – இடியப்பம்
யாழ்.நண்டு – மட்டன் – கோழி
மீன் – இறால் – கணவாய்
Very Special யாழ்.
மாட்டிறைச்சி– Beef, பன்றி
Pork
மேலும் பல




077 734 0026
021 222 6868
077 736 0353
VISA MasterCard AMERICAN EXPRESS UnionPay
வீட்டிற்கும் வேலைக்கும் வாசற்படியில்
Door To Door DELIVERY
[எந்நேரமும் INCLUDING Lockdown]
(C-1854)
Virounthu @ Yarl Pardy
Restaurant & Rooms
யாழ்பாடி
அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
49–51 Amman Road, Nallur, Jaffna.


## 4 ஆயிரத்திற்கு மேற்பட்ட பாடசாலைகளில் அதிபர் வெற்றிடங்கள் - பீரிஸ் தகவல்

(கொழும்பு)

நாடு பூராகவும் 4600 அதிபர் வெற்றிடங்கள் காணப்படுவதாகக் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார். இதன் போது மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

நாடு பூராகவும் 4600 அதிபர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. சரியான நடைமுறையில் இந்த வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

பாடசாலைகளுக்குள் இடம்பெறுகின்ற ஏற்றத்தாழ்வை குறைக்க வேண்டும். அரசியல் அழுத்தங்கள் மூலம் மாணவர்களை பாடசாலைக்குள் உள்வாங்கும் செயற்பாடு நிறுத்தப்பட வேண்டும்.

அரசியல் பின்புலம் அல்லது வேறு அழுத்தங்களின் மூலம் எக்காரணம் கொண்டும் கல்வித்துறைக்கு அதிகாரிகள் இணைத்துக் கொள்ளப்பட மாட்டார்கள்.

கல்வித்துறையின் தரத்திற்காக சரியான வேலைத்திட்டமொன்று தற்போது நடைமுறையில் உள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (நி-4)

## செயல்முறைப் பரீட்சைகள் மே மாதம் நடைபெறும்

(கொழும்பு)

2020 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தர அழகியல் பாடங்களுக்கான செயல்முறைப் பரீட்சைகள் மே 18 முதல் 31 வரை நடைபெறும் என்று இலங்கை பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது. பரீட்சைகளுக்கான உரிய திகதிகள் விரைவில் அறிவிக்கப்படும் என்றும் பரீட்சை திணைக்களம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (நி-4)



கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குரிய கொரோனா [illegible] அலுவலக உபகரணங்கள் கொமர்ஷல் வங்கியின் கிளிநொச்சி கிளையினால் நேற்று வழங்கி வைக்கப்பட்டன. (படம்:- சதீஸ், தேவானந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்கந்தாஸ்ரார் வெற்றிக்கிண்ணம் 2 வது சுற்றில் யூனியன்ஸ் அணி

ஸ்கந்தாஸ்ரார் வெற்றிக் கிண்ணம் வெற்றிக் கிண்ணத் திற்காக ஸ்கந்தாஸ்ரார் விளையாட்டுக் கழகம், 1 ஆவது ஆண்டாக நடத்தும் 30 பந்து பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டியில், முதலாவது சுற்றில் 2 ஆவது போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் யூனியன்ஸ் அணி, யாழ். ஜொனியன்ஸ் அணியை 7 இலக்குகளால் வெற்றி பெற்று 2 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளனர்.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். ஜொனியன்ஸ் அணி 29.3 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 167 ஓட்டங்களைபெற்றது.சௌமியன்-26, ஹரிபிரவீன்-16, கிஸான்துஜன்-70, பிரியதர்ஸன்-18, ஓட்டங்களை பெற்றனர்.

களத்தடுப்பில் யூனியன்ஸ் அணி சார்பாக, மோகன்ராஜ்-03,ரகுபதி, பிரவீன் தலா 02, சுஜன்தன், மதீஸன் தலா-01 இலக்கினையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யூனியன்ஸ் அணி ,22.1 ஓவர்களில் 03 இலக்குகளை இழந்து 170 ஓட்டங்களை பெற்றது. ஆகீசன்-47, துஸ்யந்தன்-10 , மோகன்ராஜ் -59, ஓட்டங்களை பெற்றனர்.

களத்தடுப்பில் யாழ். ஜொனியன்ஸ் சார்பாக, பிருந்தாபன்-01, சௌமியன்-02 இலக்கினை கைப்பற்றினர். இப் போட்டியில் சிறந்த வீரராக யூனியன்ஸ் அணியை சேர்ந்த மோன்ராஜ் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (4-6)

# புரோ ஹொக்கி லீக் போட்டி இந்தியா எதிர் ஆர்ஜென்டீனா

9 அணிகளுக்கு இடையிலான 2ஆவது புரோ ஹொக்கி லீக் போட்டி தொடரில் இந்திய அணி தனது அடுத்த ஆட்டத்தில் ஒலிம்பிக் சம்பியனான ஆர்ஜென்டீனாவை சந்திக்கிறது.

இந்த ஆட்டம் ஆர்ஜென்டீனா தலைநகர் பியூனஸ் அயர்சில் எதிர்வரும் 11 மற்றும் 12ம் திகதியில் நடைபெற்றது.

முன்னதாக இந்திய அணி வருகிற 6, 7 ஆகிய திகதிகளில் ஆர்ஜெனடீ னா அணியுடன் பயிற்சி ஆட்டத்திலும் மோதுகிறது. ஜுலை 23ஆம் திகதி தொடங்கும் டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்கு தயாராகும் பொருட்டு இந்த ஆட்டங்களில் இந்திய அணி களம் காணுகிறது.

புரோ ஹொக்கி லீக் தொடரில் அர்ஜென்டீனா அணிக்கு எதிரான ஆட்டத்தில் பங்கேற்கும் 22 பேர் கொண்ட இந்திய அணியை, இந்திய கெக்கி சங்கம் நேற்று முன்தினம் அறிவித்தது.

சமீபத்தில் நடந்த ஐரோப்பிய தொடரில் இருந்து தனிப்பட்ட காரணத்துக்காக விலகிய கப்டன் மன்பிரீத் சிங் அணிக்கு திரும்பி உள்ளனர்.

மேலும் காயத்தில் இருந்து மீண்டு இருக்கும் அனுபவம் வாய்ந்த ரூபிந்தர் பால்சிங், வருண் குமார் ஆகியோரும் அணியில் இடம் பிடித்துள்ளனர். இந்திய அணி பெங்களூருவில் இருந்து நேற்று புறப்பட்டு சென்றது. (4)

# டெல்லி அணியின் கப்டனாக ரிஷப் பண்ட் நியமனம்




இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடர் புனே நகரில் நடைபெற்றது.

அப் போட்டியில் பீல்டிங் செய்யும் போது ஷ்ரேயாஸ் ஐயரின் தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது.

இதனால் உடனடியாக மைதானத்தில் இருந்து வெளியேறினார்.

தோள் பட்டையில் ஏற்பட்ட காயத்திற்கு அறுவை சிகிச்சை செய்துள்ளார். இதனால் இங்கிலாந்துக்கு எதிரான மற்ற இரண்டு போட்டிகளில் இருந்து விலகியதோடு, ஒட்டு மொத்த 2021 ஐ.பி.எல். சீசனில் இருந்து விலகியுள்ளார்.

ஐ.பி.எல் கிரிக்கெட் தொடர் எதிர்வரும் 9ஆம் திகதி சென்னையில் தொடங்குகிறது. ஷ்ரேயாஸ் ஐயர் டெல்லி கப்பிட்டல்ஸ் அணியின் கப்டனாக இருந்தார். இதனால் அடுத்த கப்டன் யார்? என்ற கேள்வி எழுந்தது. தவான், ரகானே, அஷ்வின் போன்றோர் போட்டியில் இருந்தனர்.

இந்த நிலையில் விக்கெட் கீப்பர் மற்றும் பட்ஸ்மன்னாக ரிஷப் பண்ட் டெல்லி கப்பிட்டல்ஸ் அணி கப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார்.

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இருந்து ரிஷப் பண்ட் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார். இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடரில் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். (4)

# ஐ.பி.எல் பயிற்சிக்காக கோலி இன்று சென்னை வருகை

14ஆவது ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டி ஏப்ரல் 9 ஆம் திகதி முதல் மே 30 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

சென்னை, மும்பை, டெல்லி, பெங்களூர், கொல்கத்தா மற்றும் அகமதாபாத் ஆகிய 6 நகரங்களில் இந்த போட்டி நடக்கிறது.

இந்த போட்டியில் விளையாடும் 8 அணிகளும் உள்ளூர் மைதானத்தில் விளையாடாத வகையில் போட்டி அட்டவணை அமைக்கப்பட்டுள்ளது. டோனி தலைமையிலான சென்னை சூப்பர் கிங்ஸ் மோதும் ஆட்டம் மும்பை, டெல்லி, பெங்களூர், கொல்கத்தா ஆகிய நகரங்களில் நடக்கிறது.

ஐ.பி.எல். போட்டிக்காக ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணி சென்னையில் நேற்று முன்தினம் பயிற்சியை தொடங்கியது. ஸ்ரீராமச்சந்திரா உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் உள்ள மைதானத்தில் அடுத்த 9 நாட்களுக்கு அவர்கள் பயிற்சியில் ஈடுபடுகின்றனர்.

யுஸ் வேந்திர சாஹல், நவ்தீப் சைனி, முகமது சிராஜ், ஹர்ஷல் படேல், தேஷ் பாண்டே, முகமது அசாருதீன், சச்சின் பேபி உட்பட 11 வீரர்கள் பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

அணியின் இயக்குனர் மைக்கெசன், தலைமை பயிற்சியாளர் சைமன் காடிச், பட்டிங் ஆலோசகர் சஞ்சய் பாங்கர் ஆகியோரது மேற்பார்வையில் வீரர்கள் பயிற்சியில் ஈடுபடுகிறார்கள்.

இந்திய அணிக்கு 3 வடிவிலான போட்டிகளிலும் (டெஸ்ட், ஒருநாள் போட்டி, 20 ஓவர்) கப்டனாக இருக்கும் விராட் கோலி ஐ.பி.எல். போட்டியில் பெங்களூர் அணிக்கு கப்டனாக பணியாற்றி வருகிறார்.

அவர் பயிற்சிக்காக இன்று சென்னை வருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தனிமைக் காலம் முடிந்தபிறகு வீராட் கோலி அணியில் இணைந்து பயிற்சியில் ஈடுபடுவார்.

ஐ.பி.எல். போட்டியின் தொடக்க ஆட்டத்தில் ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணி, நடப்பு சாம்பியனான மும்பை இந்தியன்சை எதிர் கொள்கிறது. இந்த ஆட்டம் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெறும்.

ஐ.பி.எல். போட்டிக்காக சென்னை சூப்பர் கிங்ஸ் அணி சேப்பாக்கம் மைதானத்தில் தொடக்கத்தில் பயிற்சியில் ஈடுபட்டு வந்தது. தற்போது வீரர்கள் மும்பையில் பயிற்சி பெற்று வருகிறார்கள்.

சி.எஸ்.கே. தொடக்க ஆட்டத்தில் டெல்லி கப்பிடல்சை எதிர்கொள்கிறது. இந்த ஆட்டம் மும்பையில் நடக்கிறது. (4)

# நெருக்கடிகளை கொடுக்கும் வகையில் விதிமுறைகளை மாற்றிய பி.சி.சி.ஐ

சர்ச்சைக்குரிய வகையிலான சாஃப்ட் சிக்னல் முறை ஐ.பி.எல் தொடரில் நீக்கப்படுவதாக பி.சி.சி.ஐ அறிவித்துள்ளது.

ஐ.பி.எல் 2021 சீசன் எதிர்வரும் 9 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.மாலை 8 மணிக்கு ஆரம்பமாகும் போட்டிகள் 11.30 மணியளவில் முடிவடையும்.

இந்த சீசனில் ஒவ்வொரு அணியும் 90 நிமிடங்களுக்குள் பந்து வீசி முடிக்க வேண்டும். அப்படி முடிக்காவிடில் அந்த அணிக்கு அபராதம் விதிக்கப்படும். முதல்முறை தவறு செய்யும் அணியின் கப்டனுக்கு 12 லட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்படும்.

அதே தவறை 2ஆவது முறையாக செய்தால் 24 லட்சம் ரூபாய் அபாரதம் விதிக்கப்படும். அந்த அணியில் உள்ள அனைவரிடமிருந்தும் 6 இலட்சம் ரூபாய் அல்லது போட்டிக்கான கட்டணத்தில் 25 சதவீதம். இரண்டில் எது குறைவோ அது வசூலிக்கப்படும்.

3ஆவது முறையாக தவறு நடந்தால் கேப்டனுக்கு 30 லட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்படுவதுடன், ஒரு ஐ.பி.எல் போட்டியில் விளையாட தடை விதிக்கப்படும். அத்துடன் அணியில் உள்ள வீரர்களுக்கு 12 லட்சம் அல்லது 50 சதவீதம் அபராதம் விதிக்கப்படும்.

அதேபோல் களத்தில் உள்ள நடுவர்கள் அவுட் கொடுக்கும் போது சாஃப்ட் சிக்னல் என தெரிவித்தால், அது செல்லாது. 3ஆவது நடுவர் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி முடிவுகளை மாற்றிக் கொள்ளலாம்.

அதேபோல் பட்டிங் அணி நேரத்தை வீணடிக்காமல் இருக்க வேண்டும். அதை 4ஆவது நடுவர் கண்காணிக்க வேண்டும் என பி.சி.சி.ஐ விதி முறைகளை மாற்றியுள்ளது. (4)

# தனிமைப்படுத்தலில் இலங்கை லெஜெண்ட்ஸ் அணி

சச்சின் டெண்டுல்கர் உள்ளிட்ட நால்வருக்கு கொரோனா தொற்று உறுதியானதை அடுத்து, அண்மையில் நடைபெற்று முடிந்த வீதி பாதுகாப்பு உலகத் தொடரில் பங்கேற்ற இலங்கை லெஜெண்ட்ஸ் அணியில் இடம் பெற்ற அனைவரும் சுய தனி மைப்படுத்தலில் ஈடு பட்டு ள்ளனர்.

இந்தியாவின் ராய்ப்பூரில் நடைபெற்ற இப் போட்டித் தொடரில் பங்கேற்ற இந்திய லெஜெண்ட்ஸ் அணியின் சச்சின் டெண்டுல்கர், யூசுப் பதான், சுப்பிரமணியம் பத்ரிநாத், இர்பான் பதான் ஆகிய நால்வருக்கு கொரோனா தொற்று உறுதியானதை அடுத்தே, இப்போட்டித் தொடரில் பங்கேற்ற இலங்கை லெஜெண்ட்ஸ் அணியினரும் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதன்படி நாளை மறுதினம் சனிக்கிழமை வரை சுயதனிமைப்படுத்தலில் இருக்கும்படி. சுகாதரப் பிரிவு ஆலோசனை விடுத்துள்ளதுடன், சுயதனிமைப்படுத்தலின் நிறைவில் மீண்டுமொரு பி.சி.ஆர். பரிசோதனை செய்யப்படும் என சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரேரணையை நிறைவேற்ற தேவையான நிதியை முன்னரே வரவு-செலவு திட்டத்தில் இணைத்தார் பச்லெட்

(கொழும்பு)

இலங்கையில் நடந்ததாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பான ஆதாரங்களை சேகரிக்க ஐ.நா.மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் மிச்சேல் பச்லெட் நியமித்த 12 பேர் கொண்ட குழுவுக்கு 2.8 மில்லியன் அமெரிக்க டொலர் நிதிக்கு வரவு-செலவுத் திட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

எனினும் ஐ.நா. பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முன்பாகவே இந்த நிதி மிச்சேல் பச்லெட்டால் முன்வைக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சிங்களப் பத்திரிகை ஒன்றின் வெளிநாட்டு செய்தித் தொடர்பாளர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இந்த தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முன்பு, அதாவது கடந்த பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதியே 12 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டதாகவும் அதற்கு 2.8 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டு ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது என அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை செயற்படுத்த ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவைக்கு 2.8 பில்லியன் அமெரிக்க டொலர் தேவைப்படுவதாகவும் ஐ.நா. பொதுச் சபையின் 76 ஆவது அமர்வில் கூடுதல்



நிதியை கோர நடவ டிக்கை எடுக்கப்பட உள்ளதாகவும் முன்னர் செய்திகள் வெளியாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## ஆயிரம் ரூபாவுக்கு 12 அத்தியவசிய பொருட்கள் -புத்தாண்டு சலுகை-



(கொழும்பு)

எதிர்வரும் புத்தாண்டை முன்னிட்டு 12 அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய நிவாரண பொதி ஒன்றை 1000 ரூபாவுக்கு சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

இந்த நிவாரண பொதிகளை இன்று முதல் சதொச ஊடாக பெற்றுக் கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

## ரஞ்சனின் மனு மீதான தீர்ப்பு 5 ஆம் திகதி

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து நீக்க நடவடிக்கை எடுப்பதை தடை செய்வதற்கான உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி ரஞ்சன் ராமநாயக்கவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மீதான உத்தரவை எதிர்வரும் 5 ஆம் திகதி பிறப்பிப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று தீர்மானித்தது.

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டில் கடந்த ஜனவரி மாதம் 12 ஆம் திகதி உயர் நீதிமன்றத்தால் 4 வருடங்கள் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட ரஞ்சன் ராமநாயக்க, தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை நீக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதை தடுக்குமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## பெரிய அளவிலான ஒன்றுகூடல்களுக்கு தடை

(கொழும்பு)

புத்தாண்டு காலப்பகுதியில் பெரிய அளவிலான கூட்டங்களுக்கு அனுமதி இல்லை என கொரோனா கட்டுப்பட்டு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

அத்தோடு கொரோனா பரவுவதைத் தடுக்க தற்போதுள்ள சுகாதார வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிக்குமாறும் அவர் பொதுமக்களை கேட்டுக்கொண்டார்.

இலங்கையில் நோயாளிகளின் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும் பண்டிகைக் காலத்திற்குப் பின்னர் வைரஸ் பரவுவதற்கான ஆபத்து காணப்படுவதாக வெளிவிவகார அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

உலகின் சில பகுதிகளில் மூன்றாவது அலை பதிவாகியுள்ளதாகவும் குறிப்பாக இந்தியாவில் நோயாளிகளின் எண்ணிக்கை 62% அதிகரித்துள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஆகவே தற்போதுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்படும் என்றும் புதிய கட்டுப்பாடுகளை விதிக்க வாய்ப்பில்லை என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (நி-4)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோட்டார் சைக்கிள் விபத்து

## ஒருவர் படுகாயம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி - உசன் சந்திப் பகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நுணாவில் மத்தி சாவகச்சேரிப் பகுதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதியதில் விபத்து ஏற்பட்டது.

இதில் படுகாயமடைந்த இளைஞன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

மற்றைய மோட்டார் சைக்கிளில் வந்தவர் தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சாவகச்சேரிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

காயமடைந்தவர் சாவகச்சேரி மத்தியைச் சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (5-4-30)

# பயிர்ச்செய்கை ஆரம்பம்; கால்நடைகளைக் கட்டுப்படுத்தவும்

## கமக்கார அமைப்பு அறிவிப்பு

(சாவகச்சேரி)

**எழுதுமட்டுவாழ் தெற்கு கமக்கார அமைப்பிற்குட்பட்ட ஒட்டுவெளி பகுதியில் கால் நடைகளைக் கட்டுப்படுத்துமாறு கமக்கார அமைப்பின் செயலாளர் இ.தெய்வேந்திரம் பிள்ளை கால்நடை வளர்ப்பவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

எழுதுமட்டுவாழ் தெற்கில் சிறுதானியப் பயிர்ச்செய்கை மேற்கொள்வது தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் நடைபெற்றது.

கமநல திணைக்கள உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில் 30.06.2021 ஆம் திகதி வரை எழுதுமட்டுவாழ் தெற்கு கமக்கார அமைப்பிற்குட்பட்ட சிறுதானிய பயிர்ச்செய்கை மேற்கொள்ளவென ஒதுக்கப்பட்ட ஒட்டுவெளிப் பகுதியில் கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதென முடிவெடுக்கப்பட்டது.

அத்துடன் கால்நடைகளுக்கென செட்டிக்கேணி, குஞ்சுவிழுபளை மற்றும் பெரியவிழுபளை வயல்வெளிப் பகுதிகள் மேய்ச்சலுக்கென ஒதுக்கப்பட்டது.

இருப்பினும் தற்போது ஒட்டுவெளி பகுதியில் சிறுதானியப் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அப்பகுதியில் கால்நடைகளைக் கட்டுப்படுத்த அதன் உரிமையாளர்கள் தவறி வருகின்றனர். இவ்வாறான கட்டாக்காலிகளைப் பிடிக்கும் பட்சத்தில் தலா ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்படும் எனவும் கமக்கார அமைப்பின் செயலாளர் தெரிவித்துள்ளார். (5-4-30)

# திருட முற்பட்டவர் கைது

(கரணவாய்)

நெல்லியடி நகரப்பகுதியில் பூட்டிய நிலையில் இருந்த துவிச்சக்கர வண்டியின் பூட்டை உடைத்து திருட முற்பட்ட நபரொருவர் நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் நெல்லியடி நகரப் பகுதியில் பூட்டிய நிலையில் இருந்த துவிச்சக்கர வண்டி ஒன்றை உடைத்து திருட முற்பட்ட ஒருவர் அப்பகுதியில் கடமையிலிருந்த பொலிஸாரினால் அவர் கைது செய்யப்பட்டார். (5-4-60)



வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்திற்கு அறம் அறக்கட்டளையினரால் ஒரு தொகுதி கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. இப்பாடசாலையின் பழைய மாணவரான க.வாமதேவனின் நிதிப்பங்களிப்புடன் வழங்கப்பட்டன. (படம்:- மகாலிங்கம், நெடுங்கீரன்)

## வெளிவந்து விட்டது 'கலைமுகம்'

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் காலாண்டுச் சஞ்சிகையான கலைமுகம் 71 இதழ் வெளிவந்துவிட்டது. கலை, இலக்கிய, சமூக இதழான கலைமுகம் சஞ்சிகையின் ஜனவரி - மார்ச் 2021 இதழில் கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், நூல் மதிப்பீடுகள் போன்றன உள்ளடங்கியுள்ளன. (5-4)






கு.கோபிராஜ் எழுதிய "மாவையூர்" நூல் வெளியீட்டு விழா மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் யாத்திரிகர் மடத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

# நேர்முகத் தேர்வும் பிரயோகத் தேர்வும்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களில் பொது ஆங்கில பாடத்திற்கான விண்ணப்பதாரர்கள் 12 பேருக்கும் நேர்முகத் தேர்வுடன் இணைந்த பிரயோகப் பரீட்சை இன்று முதலாம் திகதி வியாழக்கிழமையும் க.பொ.த. உயர்தர கணித, விஞ்ஞானத் துறை பாடங்களுக்கான விண்ணப்பதாரர்கள் 85 பேருக்கான நேர்முகத் தேர்வு இன்று வியாழக்கிழமை மற்றும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரி யில் அமைந்துள்ள வடமாகாண கல்வி அமைச்சில் நடைபெறும்.

மேற்குறித்த நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் அனைவரும் உரிய சுகாதார நடை முறைகளைப் பின்பற்றி முகக் கவசம் அணிந்து தவறாது சமூகமளிக்குமாறு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

நேர்முகத்தேர்வில் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள், பிரயோகப் பரீட்சைக்கு தயார்படுத்த வேண்டிய விடயப்பரப்புக்கள், நேர்முகத்தேர்விற்கு சமுகமளிக்க வேண்டிய திகதி மற்றும் நேரம் ஆகிய விபரங்களை வடமாகாண சபை இணையத்தளம் www.np.gov.lk மற்றும் வடமாகாண கல்வி அமைச்சின் இணையத்தளம் www.edumin.np.gov.lk எனும் முகவரியிலும் பார்வையிட முடியும். (5-4)

## நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் 2021 ஆம் ஆண்டிற்கான பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதில் தலைவராக ந.சோதிலிங்கம், உபதலைவராக திருமதி.தவரத்தினம் தெய்வேந்திராணி, செயலாளராக ந.கனகலிங்கம், உபசெயலாளராக திருமதி.சிவசுப்பிரமணியம் தவமணி, பொருளாளராக வே.சண்முகலிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (5-6)

# விசேட பூஜை வழிபாடு

(கிளிநொச்சி)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் உலகெங்கிலும் வாழும் மக்கள் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மீள்வதற்காக இறை ஆசி வேண்டி விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில் இன்று முதலாம் திகதி வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு பளை இரட்டைக்கேணி கண்ணகை அம்பாள் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

விசேட பூஜை வழிபாடுகளின் நிறைவில் ஆலயத்தின் மஹோற்சவக் குருக்கள் சிவஸ்ரீ தே.கௌரிசங்கரக் குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயணமும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் இடம்பெறும் "ஆலய தரிசனம்" நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு நேரடி ஒளிபரப்புச் செய்யப்படும். (5-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொழிற்சங்க நடவடிக்கையில் தபால் ஊழியர்கள்

(கொழும்பு)

தபால் ஊழியர்கள் சுகயீன விடுமுறை தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

தபால் ஊழியர்களை உள்ளீர்ப்பதற்கான புதிய முறைமை உள்ளிட்ட திணைக்களத்தின் சில தீர்மானங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்த தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

நாடு முழுவதும் நேற்று முன்தினம் நள்ளிரவு தொடக்கம் நேற்று நள்ளிரவு வரை இந்த தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக தபால் மற்றும் தொலைத்தொடர்புகள் சங்கத்தின் தலைவர் சிந்தக பண்டார தெரிவித்தார்.

இதேவேளை, தபால் ஊழியர்களின் அனைத்து விடுமுறைகளும் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக தபால் மா அதிபர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

தபால் ஊழியர்களின் சுகயீன விடுமுறை தொழிற் சங்க போராட்டத்தினால் தபால் சேவைக்கு இடையூறு ஏற்பட்டுள்ளது.

ஊழியர்களால் முன்வைக்கப்பட்ட 6 கோரிக்கைகளில் 5 கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், தொழிற்சங்க நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன குறிப்பிட்டார். (நி-4)



சீனாவின் சினோபார்ம் கொவிட் 19 தடுப்பூசியின் 6 இலட்சம் டோஸ்கள் நாட்டை வந்தடைந்தன.

# நாடு கடத்தப்பட்ட தமிழர்கள் இராணுவத்திடம் ஒப்படைப்பு

(கொழும்பு)

**ஜேர்மன் மற்றும் சுவிட்சர்லாந்திலிருந்து நாடு கடத்தப்பட்ட ஈழத்தமிழர்கள் 24 பேர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து குடிவரவு மற்றும் குடியகல்வுத் துறையினரால் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.**

தனிமைப்படுத்தல் செயல் முறை முடிந்ததும், அவர்கள் சி.ஐ.டி மற்றும் தேசிய புலனாய்வு பிரிவினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

சுவிட்சர்லாந்து மற்றும் ஜேர்மனில் சட்டவிரோதமாக தங்கியிருந்த 24 ஈழத்தமிழர்கள், நாடு கடத்தப்பட்டு சிறப்பு விமானத்தின் மூலமாக நேற்றுக் காலை கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

ஜேர்மனிலிருந்து 20 பேரும், சுவிட்சர்லாந்திலிருந்து நான்கு பேருமே இவ்வாறு இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டனர்.

குடிவரவு சட்டங்களை மீறியதற்காக அவர்கள் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டு முதல் அந்த நாடுகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் அந்த நாடுகளின் நீதிமன்றங்களில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் அவர்கள் இவ்வாறு நாடு கடத்தப்பட்டனர். (நி-4)

# குற்றச்சாட்டுகளை நியாயப்படுத்த முன்வைக்கும் எந்தவொரு காரணிகளையும் ஏற்கமாட்டோம்

(கொழும்பு)

மேற்குலக நாடுகளுக்கு அடிபணிந்து செயற்படாமையின் காரணமாகவே ஜெனிவாவில் இலங்கை மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. எனவேதான் இவ்வாறு முன்வைக்கப்பட்டுள்ள போலியானதும் அடிப் படையற்றதுமான குற்றச்சாட்டுக்களை முற்றாக நிராகரிப்பதாக அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது என்று அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

பொலிஸ் உத்தியோகத்தரொருவர் பிரதான வீதியில் சாரதியொருவரை மோசமாக தாக்கியுள்ளார். ஜெனிவாவில் இலங்கை மீது அழுத்தம் பிரயோகிக்கப்படுகின்றமைக்கு இதுபோன்ற செயற்பாடுகளல்லவா காரணம்? என்ற கேள்விக்கு பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த பொலிஸ் உத்தியோகத்தருக்கு எதிரான அரசாங்கத்தின் நிலைப்பாட்டை வெறுமனவே வசனங்களில் அல்லாமல் செயலில் நிரூபித்துள்ளோம். அதற்கமைய குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் பணியிடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளதோடு, அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கப்படவுள்ளது.

எனவே ஜெனிவா பிரேரணை இந்த காரணிகளுக்காக சமர்ப்பிக்கப்படவில்லை. மேற்குலக நாடுகளுக்கு அடிபணிந்து எமது அரசாங்கம் செயற்படாமையின் காரணமாகவே இலங்கைக்கு எதிராக போலியானதும், அடிப்படையற்றதுமான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அந்தக் குற்றச்சாட்டுக்களை நாம் உத்தியோகபூர்வமாக நிராகரித்துள்ளோம்.

எனவே இலங்கை மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை நியாயப்படுத்துவதற்காக முன்வைக்கப்படும் எந்தவொரு காரணியையும் நாம் ஒரு போதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என அவர் தெரிவித்தார். (நி-4)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1987 இந்து நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: செவ் 11 சூரி 9 ல் உயரம்: 5'5"<br>தகைமைஃதொழில்: **BSC Q.S, Sity Manager (Petrol Station) Londan**<br>எதிர்பார்ப்பு: படித்த அழகான பெண், வெளி நாட்டுப்பெண்.<br>தொ.இ: B/11689 | பிறப்பு: 1992 இந்து நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 12' செவ் 3 சூரி 4 ல்<br>தகைமை/தொழில்:. **Lawyer (Avustralia)**<br>எதிர்பார்ப்பு: **Doctor, Engineer.** வெளி நாடும் விரும்பத்தக்கது<br>தொ.இ: G/11799 |
| பிறப்பு: 1990 இந்து நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 30' செவ 9 சூரி 12 ல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: **Bachalor of IT, Work-Assciate Tech Lead**<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, கொழும்பில் இருப்பது சிறந்தது., உள் நாடு<br>தொ.இ: B/11691 | பிறப்பு: 1985 இந்து நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: செவ்.சூரி 5 ல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: மருத்துவத்துறை, தொழில் - வைத்தியர்<br>எதிர்பார்ப்பு: வைத்தியர் விரும்பத்தக்கது. உள் நாடு<br>தொ.இ: G/7089 |
| பிறப்பு: 1985 இந்து நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 17' செவ் 3 சூரி 4 ல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: **B.SC, Tesco (U.K)**<br>எதிர்பார்ப்பு: படித்த பெண், மணமகன் விவாகரத்தானவர் 4 வயதில் பெண்பிள்ளை தாயாருடன் உள்ளது. வெளி நாடும் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/11692 | பிறப்பு: 1980 இந்து நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 34 செவ் 10 சூரி 7 ல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: **B.A Work-Management Assistant**<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி.அரச உத்தியோகம், வெளி நாடும் விரும்பத்தக்கது.<br>தொ.இ: G/8563 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா: 21 செவ் 11 சூரி 12 ல் உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: **NCE Draughtman ship. NT Engineer, Work-TA**<br>எதிர்ப்பார்ப்பு: ஆசிரியர், **MA,DO** அரச உத்தியோகம் விரும்பத்தக்கது. உள் நாடு<br>தொ.இ: B/11694 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 25' செவ் 1 சூரி 3 ல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: **PHD(maths) Work-Teaching Assistant**<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, அரச தனியர் உயர் உத்தியோகம். வெளி நாடும்<br>தொ.இ: G/11178 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன்** [illegible]
**சேவைக் கட்டணமாக ரூபா 500** [illegible]


# பரீட்சைகள் திணைக்கள ஊழியர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பரீட்சைகள் திணைக்களத்தின் ஊழியர்கள் சிலர் நேற்று எதிர்ப்பில் ஈடுபட்டுள்ளனர். நாளாந்தம் வழங்கப்படும் மேலதிக நேர கொடுப்பனவு தாமதமாகியமையால் ஊழியர்கள் எதிர்ப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த விடயம் குறித்து பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திடம் வினவிய போது, ஊழியர்களுக்கான மேலதிக நேர கொடுப்பனவிற்கு தேவையான நிதியை திறைசேரியிடம் கோரியுள்ளதாக பரீட்சைகள்ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார்.

திறைச்சேரியினால் நிதி ஒதுக்கப்பட்டதும், அதனை விரைவாக ஊழியர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார். (நி-4)


## வாழ்க்கைத்துணை தேவை

சமூக உளம் கொண்ட நகைக்கடை உரிமையாளரையும் பிள்ளைகளையும் கவனித்து வீட்டையும் நிர்வாகம் செய்யக் கூடிய நற்குணமும் குடும்ப நலனில் அக்கறையுடைய சுகதேகியான களவு பொய் ஒழிப்பு மறைப்பு இல்லாத விவேகமான சமூக நலன் கொண்ட பெண் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்பட மாட்டாது. வய்து 40-50 வயதுக்குள் இருக்க வேண்டும்.விவாகரத்து ஆனவர்கள், கணவனை இழந்தவர்களும் தொடர்பு கொள்ளலாம்.ஆதரவு அற்றவர்களுக்கு முன் உரிமை வழங்கப்படும். (6410)

தொடர்பு கொள்ள:077 707 9068, 075 406 3938


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த மூன்று மாதத்தில் 28 மாணவர்கள் இடை விலகல்

**(குருமன்காடு)**

**வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்ற 28 மாணவர்கள் கடந்த மூன்று மாதங்களில் பாடசாலையை விட்டு இடை விலகியுள்ளனர். அவர்களை மீள இணைப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலாளர் கே.சுலோஜனா தெரிவித்துள்ளார்.**

சிறுவர், பெண்கள் பாதுகாப்பு தொடர்பில் செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இதனைத் தெரிவித்தார்.

கடந்த ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரையிலான 3 மாத காலப்பகுதியில் செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளில் இருந்து 28 மாணவர்கள் இடை விலகியுள்ளதாக கிராம உத்தியோகத்தர் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மாணவர்கள் இடை விலகியமைக்கான காரணத்தை கண்டறிந்து அவர்களை மீளவும் பாடசாலை கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் எமது பிரதேச செயலக சிறுவர், பெண்கள் பிரிவு உத்தியோகத்தர்கள் முன்னெடுத்துள்ளனர்.

அத்துடன், பாடசாலை இடை விலகும் மாணவர் விபரத்தை அதிபர்கள் பிரதேச செயலகத்திற்கு வழங்கினால் அவர்களை மீள் இணைப்பதற்கான நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுக்க முடியும் எனவும் தெரிவித்தார். (5-4-250)

# பழைமைவாய்ந்த மரம் வெட்டிச் சரிப்பு



(நெளுக்குளம்)

வவுனியா வைரவபுளியங்குளம் ஆதிவிநாயகர் ஆலயத்தில் காணப்பட்ட பழைமைவாய்ந்த மதுரமரம் கடந்த திங்கட்கிழமை வெட்டி வீழ்த்தப்பட்டுள்ளது.

வவுனியா வைரவபுளியங்குளம் ஆதிவிநாயகர் ஆலயமானது ஆரம்பகாலத்தில் குறித்த மதுரமரத்தின் கீழே அமையப்பெற்றிருந்தது.

இவ்வாலய திருவிழா காலங்களில் தேர் ஓடும் வீதியில் இம்மரம் அமைந்துள்ளதாகவும் தேர்த்திருவிழாவின் போது மிக சிரமத்துடனே தேரினை இழுக்க வேண்டியுள்ளது என்ற காரணத்தை காட்டியே நேற்றையதினம் ஆலய பரிபாலன சபையினரால் குறித்த மரம் வெட்டப்பட்டது.

இது தொடர்பாக பொதுமக்களினால் கிராம உத்தியோகத்தருக்கு தகவல் வழங்கப்பட்டதுடன் வவுனியா பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து ஆலய பரிபாலன சபையினருக்கு எதிராக வவுனியா பொலிஸாரினால் வழக்குப்பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு தெரிவிக்கப்பட்டது. (5-4-299)



வவுனியாவில் தந்தை செல்வாவின் 123 ஆவது ஜனன தின நிகழ்வுகள் வவுனியா மணிக்கூட்டு கோபுர சந்திக்கு அருகிலுள்ள தந்தை செல்வா நினைவுத்தூபியில் நேற்றுக் காலை இடம்பெற்றது. இந்நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் வவுனியா நகரசபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

(படம் : -சதீஸ்)

# எல்லை தாண்டி மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்க இதுவரை தீர்மானிக்கவில்லை

(மன்னார்)

இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி வந்து மீன் பிடிப்பதற்கான அனுமதிப்பத்திரங்கள் எதனையும் வழங்குவதற்கு அரசாங்கம் என்ற ரீதியிலோ அல்லது அமைச்சு என்ற ரீதியிலோ நாங்கள் தீர்மானிக்கவில்லை என இராஜாங்க அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டதன் பின் ஊடகவியலாளர்களின் கேள்விக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடிக்கும் விடயத்தை கையாள்வதில் எமக்கு இரண்டு பிரச்சினைகள் உள்ளன. இந்திய மீனவர்களின் இழுவைப்படகுகள் எமது கடற்பரப்பில் அதிக அளவில் நுழைகிறது.

அதேபோன்று எமது மீனவர்களும் இந்திய எல்லைக்குள் நுழைகின்றனர். இப்பிரச்சினையை கையாள்வது குறித்து நாங்கள் கலந்துரையாடி உள்ளோம். அத்துடன் இந்திய இழுவைப்படகுகள் பாரிய அளவில் எமது கடல் எல்லைக்குள் நுழைந்து தடை செய்யப்பட்ட இழுவைப் படகுகளைப் பயன்படுத்தி சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

இதற்கு நாங்கள் பாரிய எதிர்ப்பினையும் வெளிப்படுத்தி உள்ளோம். இதற்கு அமைவாக எமது கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபடுகின்றவர்களைக் கைது செய்யுமாறு கடற்படையினருக்கும் கடலோர பாதுகாப்பு பிரிவினருக்கும் தொடர்ச்சியாக அறிவுறுத்தல்களை விடுத்துள்ளோம் என தெரிவித்தார். (5-4-285)




# புதுமுறிப்புக் குளத்தின் கீழ் 884 ஏக்கரில் சிறுபோகம்

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்ட புதுமுறிப்புக் குளத்தின் கீழான 2021 சிறுபோக நெற்செய்கைக் கூட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை புதுமுறிப்பு பொது நோக்கு மண்டபத்தில் கரைச்சி பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்றது.

குறித்த கூட்டத்தில் புதுமுறிப்புக்குளத்தில் 18 அடி 7 அங்குல நீர் உள்ளதாகவும், இது இவ் வருட சிறுபோகப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ள போதுமானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனடிப்படையில் புதுமுறிப்பு, சிவநகர் ,ஜெயந்திநகர் , சிறுமத்திய வகுப்பு, சோலை நகர், தோப்புக்காணிகள் உள்ளடங்கலாக 884 ஏக்கர் நெற்செய்கையும் 100 ஏக்கர் சிறு தானியப் பயிர் செய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கால் நடை கட்டுப்பாட்டை மீறினால் அறவிடப்படும் தண்டப் பணம் தொடர்பாகவும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. (5-4-254)



"சமுர்த்தியினால் சுபீட்சம் அடைந்த தேசத்தையும் செழிப்பான நாளையும் உருவாக்க ஒன்றிணைவோம்" எனும் தொனிப் பொருளில் மன்னார் மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான 2021 ஆம் ஆண்டுக்கான தொழிற்சங்க சம்மேளனக் கூட்டம் அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தர் சங்கத்தின் ஏற்பாட்டில் மன்னார் நகர சபை மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

(படம்: ஜோசப்நயன்)



சிதம்பரம் அறக்கட்டளை ஊடாக வவுனியா சுதந்திரபுரம் சரஸ்வதி வித்தியாலய மாணவர்கள் 30 பேருக்கு நேற்று முன்தினம் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

(படம்: சதீஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராசிபலன்

01.04.2021
பங்குனி 19, வியாழக்கிழமை,
சதுர்த்தி பிற்பகல் 4.06 மணிவரை
விசாகம் நண்பகல் 11.59 மணிவரை
சுபநேரம் 7.41-9.11 மணிவரை
இராகுகாலம் 1.41-3.11 மணிவரை
சந்திராஷ்டமம்-ரேவதி, அச்சுவினி
சர்வதேச முட்டாள் தினம் வளவன்


மேஷம்

மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், கொடுக்கல்- வாங்கல் களில் கவனம் தேவை, ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும்.


ரிஷபம்

மகிழ்ச்சிதரும் செய்திகள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.


மிதுனம்

ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த கவலைகள் மறையும், தன்னம் பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும், கௌரவமான நாள்.


கடகம்

பெற்றோர் மீதான பாசம் அதிகரிக்கும் நாள், அடிப்படை வசதி வாய்ப்புக்கள் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.


சிம்மம்

தாய் வழி உறவில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.


கன்னி

கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காக உறவினர்களின் உதவியை நாடுவீர்கள், சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், போசன சுகமுண்டு.


துலாம்

உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, புதிய பொறுப் புக்களும் பதவிகளும் வந்து சேரலாம்.


விருச்சிகம்

விரும்பிய காரியம் விரும்பியபடி நடைபெறும், பயணத்தால் பலன் கிடைக்கும், வழிபாடு குதூகலம் தரும், போசன சுகமுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறும்.


தனுசு

மாற்றங்களால் ஏற்றமுண்டு, திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சுப விரயங்கள் கூடும் நாள், சயனசுகக் குறைவான நாள்.


மகரம்

பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.


கும்பம்

நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், நீண்ட நாளைய விருப்ப மொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் கூடும்.


மீனம்

தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தொழில் ரீதியான பயணங்கள் அனுகூலம் தரும், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் நாள்.

கெட்ட செய்தி விரைந்து ஓடும். நல்ல செய்தி பின் தங்கும்

# சர்வதேசத்தால் தனிமைப்படுத்தப்படும் இலங்கை - மங்கள சமரவீர

(கொழும்பு)

**சர்வதேசத்தில் தனிமைப்படுத்தப்படும் மிக ஆபத்தான நிலையில் இலங்கை உள்ளது என முன்னாள் நிதி அமைச்சர் மங்கள சமரவீர எச்சரித்துள்ளார்.**



கிணற்று தவளைகளாக வாழ்வதில் எந்த பயனும் கிடையாது. இதனை மையப்படுத்தியே தற்போது அரசாங்கத்தின் போக்கு காணப்படுவதாகவும் அவர் குற்றம்சுமத்தினார்.

பத்தரமுல்ல - கோட்டே சோலிஸ் ஹோட்டலில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில் ,

இலங்கையின் உள்நாட்டுப் போர் 2009 இல் நிறைவடைந்ததன் பின்னர் பல உலக நாடுகள் வாழ்த்துக்களை தெரிவித்தன.

மறுபுறம் ஒரு மீறல்களை மையப்படுத்தி விசாரணைகளுக்கும் வலியுறுத்தின. குறிப்பாக வெள்ளைக்கொடி விவகாரம் போன்ற சம்பவங்களை மையப்படுத்தி விசாரணைகளை சர்வதேசம் வலியுறுத்தியது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு மற்றும் பரணகம ஆணைக்குழு ஆகியவற்றின் பரிந்துரைகளிலும் இவ்வகையான உள்ளக விசாரணைகள் குறித்து வலியுறுத்தப்பட்டிருந்தன.

உள்நாட்டு மக்களை ஏமாற்றுவதைப் போன்று சர்வதேச சமூகத்தை ஏமாற்றிவிட முடியாது. பொருளாதாரம், சர்வதேசம் உள்ளிட்ட பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் இலங்கை தற்போதுள்ளது.

சர்வதேச மட்டத்தில் தனிமைப்படுத்தப்படும் ஆபத்தான நிலையில் இலங்கை உள்ளது. இதனை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார். (நி-4)

# அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தேசிய பாதுகாப்புக்கு சிக்கலானவை

## சஜித் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கத்தின் பொறுப்பு மக்களை அழிப்பதல்ல. அவர்களை பாதுகாப்பதாகும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் சஜித் பிரேமதாஸ மேலும் கூறியுள்ளதாவது, "புற்றுநோய் ஏற்படுத்தக்கூடிய தேங்காய் எண்ணெய் இறக்குமதியானது, தேசிய பாதுகாப்புக்கு ஒரு பிரச்சினையான காரணியாகவே நாம் பார்க்கின்றோம்.

இன்று, இந்த அரசாங்கத்தின் சில நடவடிக்கைகள், பயங்கரவாதத்தை விட தேசிய பாதுகாப்புக்கு மிகவும் சிக்கலானவையாக காணப்படுகின்றது.

மேலும் நாட்டினதும் மக்களினதும் தேசிய பாதுகாப்பை அழிக்கும் அரசாங்கமாக தற்போதைய அரசாங்கம் மாறி வருகின்றது.

அரசாங்கங்களின் பொறுப்பு மக்களை அழிப்பது அல்ல, அவர்களை உயிருடன் வைத்திருப்பது என்பதை நான் அரசாங்கத்திற்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

அத்துடன் புற்றுநோய் ஏற்படக்கூடிய தேங்காய் எண்ணெய் மோசடியில் ஈடுபட்ட அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்தும் வரை நாங்கள் போராட்டத்தில் ஈடுபடுவோம்.

அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தற்போது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது" என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# புதிய சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட பின்னரே மாகாண சபைத் தேர்தல்

## உதய கம்மன்பில

(கொழும்பு)

மாகாணசபை தொடர்பான புதிய சட்ட மூலம் நிறைவேற்றப்பட்ட பின்னர் தேர்தல் நடத்தப்படும். அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சட்டமூலம் குறித்து அமைச்சர்களால் வேறுபட்ட நிலைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளமையால், கட்சித்தலைவர் கூட்டத்தில் இது தொடர்பில் கலந்தாலோசித்து இறுதி தீர்மானத்தை எடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளதாக அமைச்சரவை இணை பேச்சாளர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இணைய வழியூடாக நடைபெற்ற போது இதனைத் தெரிவித்தார்.

. மாகாணசபைத் தேர்தல் முறைமையில் திருத்தங்களை முன்னெடுப்பதற்கான சட்ட மூலம் கடந்த (திங்கட்கிழமை) அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டது. இதுவரையில் மாகாணத்தில் அதிக வாக்குகளைப் பெற்றுக் கொண்ட கட்சிக்கு இரு போனஸ் ஆசனங்கள் வழங்கப்படும்.

எனினும் ஸ்திரமான மாகாணசபைகளை உருவாக்குவதை நோக்காகக் கொண்டு, ஒரு மாகாணத்தில் மாவட்டமொன்றுக்கு வழங்கப்படும் போனஸ் ஆசனங்களை இரண்டாக அதிகரிப்பதற்கு புதிய சட்டமூலத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஸ்திரமானதொரு மாகாண சபையை உருவாக்குவதற்கான வாய்ப்பு கிடைக்கப் பெறும்.

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படும் பல கட்சிகள் அமைச்சரவையை பிரதிநிதித்துவப்படுத்துபவையல்ல.

எனவே தான் கட்சிதலைவர் கூட்டத்தில் இது தொடர்பில் இறுதி தீர்மானம் எடுப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆலோசனை வழங்கினார் எனத் தெரிவித்தார். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனிவா விடயத்தில் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்கத் தயார்

(கொழும்பு)

**ஜெனிவா தொடர்பான விவ காரங்களின் போது , பிரதான எதிர்க்கட்சி என்ற வகையில் அரசாங்கத்திற்கு முழுமை யான ஒத்துழைப்பை பெற்றுக் கொடுக்க தயாராக இருப்பதாக வும் இதனூடாக அரசியல் இலா பத்தை தேடப்போவதில்லை என்றும் ஐக்கிய மக்கள் சக்தி யின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.**

எதிர்க்கட்சி தலைவர் அலு வலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்தார்.

ஜெனிவா கூட்டத்தொடர் தொடர்பில் எதிர்க்கட்சி தவறான பிம்பத்தை ஏற்படுத்துவதாக அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரி வித்துள்ளார். நாம் ஒரு போதும் அவ்வாறான செயற் பாடுகளில் ஈடுபடவில்லை. நாம் யதார்த்தத்தை புரிந்து கொள்ள வேண்டும். ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேர வையின் அறிக்கையில் யுத்த கால குற்றச் செயற்பாடுகளை விடவும் தற்போதைய அரசாங் கத்தில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் தொடர்பிலேயே கூறப்பட்டுள் ளது.

இந்நிலையில் இந்த விட யத்தை அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும். காலம் காலமாக இலங்கைக்கு ஆதர வாக வாக்களித்தவர்கள் இம்



முறை வாக்களிக்கவில்லை. இது தொடர்பில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

இலங்கை இராணுவத்தி னர் ஒரு மக்கள் பிரிவினருக்கு நெருக்கடி ஏற்படுத்தும் வகை யில் திட்டமிட்டு செயற்பட்டுள்ள தாக எந்தவொரு அறிக்கை யிலும் குறிப்பிடப்படவில்லை. ஆனால் தனி நபர்கள் தொடர் பில் விசாரணைகளை முன் னெடுக்குமாறு அந்த ஆணைக் குழுவின் அறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ளது.

இதேவேளை கருணா அம் மான் 600 பொலிஸ் உத்தி யோகத்தர்களை திட்டமிட்டு கொலை செய்துள்ளதாக கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு வின் அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது. ஆனால் அது தொடர்பில் எத்தகைய நடவடிக் கையும் எடுக்கப்படவில்லை. மாறாக உயர் பதவிகளை மாத் திரம் பெற்றுக் கொடுத்துள்ளனர்.

இந்நிலையில் இதனூடாக நாம் அரசியல் இலாபங்களைப் பெற்றுக் கொள்ள முயற்சிக்க வில்லை. எனினும் நாடு என்ற ரீதியில் எமது நிலைப்பாட்டை கட்சித் தலைவர் தெளிவாக பாராளுமன்றத்தில் தெரிவித்து ள்ளார். ஜெனிவா விவகாரம் தொடர்பில் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு நாம் தயாராகவே இருக்கின் றோம் என ஹர்ஷ தெரிவித் தார். (நி-4)

# பசிலுக்கு எதிரான வழக்கு செப்டெம்பரில் நடைபெறும்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவிற்கு எதிராக திவி நெகும நிதி மோசடி குற்ற ச்சாட்டு தொடர்பான வழக்கின் விசாரணை திகதியை மேல் நீதிமன்றம் அறிவித்துள் ளது.

36.5 மில்லியன் ரூபாய் திவிநெகும நிதியைப் பயன் படுத்தி 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது, பஞ்சாங்கம் மற்றும் ஜி.ஐ. குழாய் விநியோகித்தமை தொடர்பாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

அந்த வகையில் குறித்த



வழக்கு விசாரணை செப்டெ ம்பர் 27 ஆம் திகதி ஆரம்ப மாகும் என மேல் நீதிமன்ற நீதிபதி நேற்று புதன்கிழமை அறிவித்துள்ளார். (நி-4)

# மாநகர சபை வாகனங்களுக்கு ஜி.பி.எஸ்.தொழில்நுட்பம்

## கல்முனை மாநகர முதல்வர்

(கல்முனை)

மாநகர சபை வாகனங் களை சட்டவிரோத நடவடிக் கைகளுக்காகப் பயன்படுத்து வதை தடுக்க ஜி.பி.எஸ். தொழி நுட்பம் பொருத்தும் நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளதாக கல் முனை மாநகர முதல்வர் சிரே ஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தெரிவித்தார்.

கல்முனை மாநக்ர சபை யின் 36 ஆவது மாதாந்த பொதுச் சபை நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் நடைபெற்ற போது இவ்வாறு தெரிவித் தார். (நி-4)

# ஷானி உட்பட மூவருக்கு விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

குற்றப்புலனாய்வ திணைக்களத்தின் முன் னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர உட்பட மூவர் எதிர்வரும் ஏப்ரல் 7 ஆம் திகதி வரை மீண்டும் விள க்கமறியலில் வைக்கப்பட்டு ள்ளனர். (நி-4)

# ரவிக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

2016 ஆம் ஆண்டில் இடம்பெற்ற பிணை முறி மோசடி தொடர்பான வழக்கில் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க மற்றும் 6 பேர் இன்று வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்க ப்பட்டுள்ளனர். (நி-4)

# 6 ஆயிரம் வாள்கள் விசாரிக்க குழுக்கள்

(கொழும்பு)

ஏப்ரல் 21 பயங்கரவாத தாக்குதல் காலப்பகுதியில் 6000 வாள்கள் இறக்குமதி செய்யப்பட்டமை குறித்த விசாரணைக்கு உதவி பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் குற்றப் புல னாய்வு திணைக்களத்தின் இரண்டு குழுக்கள் நிய மிக்கப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் மேன் முறையீட்டு நீதிமன்றில் மன்றுரைத்து ள்ளார். (நி-4)

# சலுகை விலையில் பொருட்கள் சந்தைப் பொறிமுறை அறிமுகம்



(கொழும்பு)

கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்கு சலுகை விலையில் பொருட்களைப் பெறுவதற்கான சந்தை பொறிமுறை அமைக்கப்ப டும் என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரி வித்துள்ளார்.

உள்ளூர் உற்பத்தியாளர் களை ஊக்குவிக்கும் திட்ட த்தின் ஒரு பகுதியாக இடம் பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக் கும் போதே அமைச்சர் இதனை குறிப்பிட்டார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவின் தேசிய கொள்கை அறிக்கையின் கீழ் உள்ளூர் தயாரிப்பு களை அறிமுகப்ப டுத்தும் விதமாக அர்சாங்கம் செயற்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

மேலும் பொதுத்துறை யின் தலையீட்டால் உயர்தர பொருட்களை நியாயமான விலையில் வழங்க முடியும் என்றும் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித் தார். (நி-4)

# கணக்கறிக்கை சமர்ப்பிக்காத கட்சிகள் ரத்து செய்யப்படும்- தேர்தல்கள் ஆணைக்குழு




(கொழும்பு)

அங்கீகரிக்கப்பட்ட கட்சி களில் 4 கட்சிகள் 2019 ஆம் ஆண்டுக்கான கணக்கறி க்கையை இதுவரை கைய ளிக்கவில்லை என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்து ள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன் றில் இந்த விடயம் குறிப்பிட ப்பட்டுள்ளது.

அது தொடர்பிலான விளக்க ங்களை பெற்றுக் கொள்வத ற்காக அந்தக் கட்சிகளின் பிரதி நிதிகள் எதிர்வரும் 22 ஆம் திகதி தேர்தல்கள் ஆணை க்குழுவிற்கு அழைக்கப்பட்டு ள்ளனர்.

குறித்த கட்சிகள் அன்றைய தினம் கணக்கறிக்கை களை வழங்கத் தவறும் பட்சத்தில் அவற்றின் அங்கீகா ரத்தை இரத்து செய்யவுள் ளதாக தேர்தல்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது. (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொவிட் தொற்றுக்கு பிந்திய காலத்தில் வேலையற்றோர் வீதம் அதிகரிப்பு

(கொழும்பு)

**நாட்டில் வேலையற்றோர் விகிதம் கொவிட் வைரஸ் தொற்றுக்கு பிந்தைய காலப் பகுதியில் இதுவரை இல்லாத அளவுக்கு அதிகரித்துள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

நாட்டில் ஒட்டு மொத்த வேலையற்றோரில் இளைஞர் மற்றும் பெண்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளதாகவும் திணைக்களம் வெளியிட்டுள்ள புள்ளிவிபரத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்புக்கு அமைய நாட்டின் வேலையற்றோர் வீதம் 5.8 சத வீதத்தை எட்டியுள்ளது என திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு ஜூலை-செப்டெம்பர் காலப்பகுதியில் திணைக்களம் வெளியிட்டுள்ள தகவலின் படி நாட்டில் மொத்தம் 4 இலட்சத்து 86 ஆயிரத்து 524 பேர் வேலையில்லாதோர் பட்டியலில் இருந்துள்ளனர். (நி-4)

# மோட்டார் சைக்கிள்களின் இயங்கு நிலை ஆராய்வு

(கொழும்பு)



மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி விபத்துக்கள் காரணமாக தினமும் ஐந்து முதல் ஆறு உயிர்கள் வரை இழக்கப்படுவதாகபொலிஸ் ஊடகதொடர்பாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதனால் மோட்டார் சைக்கிள் ஆய்வு நடவடிக்கை நேற்று முதல் இலங்கை முழுவதும் ஆரம்பித்துள்ளதாகவும் சோதனை செய்யப்படும் மோட்டார் சைக்கிள்களின் தரம் மற்றும் அவற்றின் இயங்கும் நிலை ஆராயப்படும் என அவர் தெரிவித்தார். (நி-4)

# கட்டாரில் பணியாற்றும் இலங்கையர்களுக்கு சம்பளமாக ஆயிரம் றியால் மட்டுமே

(கட்டார்)

கட்டாரில் பணியாற்றும் சகல ஊழியர்களுக்கும் குறைந்தபட்ச சம்பளமாக ஆயிரம் றியால் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

சர்வதேச தொழில் அமைப்பின் கட்டாருக்கான அலுவலகம் இது தொடர்பாக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கான கட்டார் தூதுவராலயமும் இதனை உறுதிப்படுத்தியுள்ளது. இதன் பிரகாரம் வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச சம்பளத்தை நிர்ணயித்த முதலாவது மத்திய கிழக்கு நாடாக கட்டார் திகழ்கிறது. இந்த சம்பள முறைமை கட்டாரில் பணியாற்றும் சகல நாடுகளைச் சேர்ந்த ஊழியர்களுக்கும் உரித்தாகும். நிறுவனங்கள் மற்றும் வீடுகளில் பணியாற்றுபவர்களும் இந்த சம்பளக் கட்டமைப்பில் உள்வாங்கப்படுவார்கள்.

இதேவேளை, குறைந்தபட்ச சம்பளமாக ஆயிரம் றியால் வழங்குவதுடன், தொழிலாளர்களுக்கு தங்குமிடம் மற்றும் உணவு போன்ற வசதிகளும் செய்து கொடுக்கப்படும். இந்த வசதிகளை வழங்காதுவிடத்து அதற்காக மேலதிக கொடுப்பனவுகளை ஒதுக்க வேண்டும் என்றும் சர்வதேச தொழில் அமைப்பின் கட்டாருக்கான அலுவலகம் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (நி-4)

# கொரோனா நோயாளர் குணமடைவு தொடர்ந்து இலங்கை முன்னிலை

(கொழும்பு)

உலகளாவிய ரீதியில் கொரோனா நோயாளர்கள் விரைவாக குணமடையும் நாடுகளின் பட்டியலில் இலங்கை தொடர்ந்தும் முன்னிலை வகிக்கிறது.

அந்த வகையில் இலங்கையில் நோய் தொற்றுக்குள்ளானவர்கள் குணமடையும் வேகம் 96.45 சதவீதமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் இந்தியா, ரஷ்யா ஆகிய நாடுகள் 2, 3 ஆம் இடங்களில் உள்ளன.

உலகளாவிய ரீதியில் கொரோனா நோயாளர்கள் குணமடையும் நாடுகளின் பட்டியலில் இலங்கை மார்ச் 20 ஆம் திகதி முதலிடத்திற்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தது.

தொடர்ந்து முதலிடத்தில் இலங்கை இருந்து வருகின்றது. (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மனமும் நிறமும்!

ஒரு நண்பர் வந்தார். மிகவும் இறுக்கமாக உடை அணிந்திருந்தார். ஆடைக்குள்ளேயே அவர் மாட்டிக்கொண்டு இருப்பது போல தெரிந்தது.

ஏன் துணி குறைவாக எடுத்து விட்டீர்களா? என்று கேட்டேன்.

இல்லை எனக்கு எப்பவும் இறுக்கமாக உடை அணிவது தான் பிடிக்கும் என்றார். ஒருவர் எப்படி உடை அணிகிறார் என்பதை வைத்தே அந்த ஆள் எப்படிப்பட்டவர் என்பதை கண்டுபிடித்து விடலாம். உடை அணியும் விதம் ஒருவருடைய மனநிலையை வெளிப்படுத்துமாம்.

இறுக்கமான உடை அணிபவர்கள் பொதுவாக மன நிம்மதி இல்லாதவர்களாக இருப்பார்களாம்! கோபக்காரர்களாக இருப்பார்களாம்! இறுக்கமில்லாமல் ஆடை அணிபவர்கள் அமைதியான ஆளாக இருப்பார்களாம். சாந்தமாக இருப்பார்களாம். இவர்களெல்லாம் போராடுவதற்கு சரியாக வரமாட்டார்களாம்.

அதனாலே தான் போர் வீரர்களுக்கு எல்லாம் இறுக்கமான உடை தான் கொடுப்பார்களாம். ஆனால் சந்நியாசிகளைப் பாருங்கள். அவர்களுக்கு எல்லாம் இறுக்கமில்லாத உடைகள் தான்! அவர்களெல்லாம் டைட் பான்ட் போட்டுக்கொண்டு நிற்க மாட்டார்கள். அதேமாதிரி சந்நியாசிகள் காவி உடையைத் தேர்ந்தெடுப்பதற்கும் காரணம் உண்டு.

பல ஆண்டுகள் சோதனை செய்து பார்த்து விட்டுத்தான் சந்நியாசத்திற்கு காவிதான் சரி என்று முடிவு செய்திருக்கிறார்கள். பௌதீக விஞ்ஞானப்படியும் அதுதான் சரி.

சூரிய ஒளியிலே ஏழு வண்ணங்கள் உண்டு.

ஒரு பொருள் மேலே அது விழும்போது... அந்தப் பொருள் நமக்கு சிவப்பாகத் தெரிந்தால் அந்தப் பொருள் சிவப்பைத் தவிர மற்றைய எல்லா நிறக் கதிர்களையும் உள்வாங்கிக்கொண்டு சிவப்பு நிறத்தை மட்டும் விட்டு விடுகிறது. அதாவது விலக்கி விடுகிறது. அதனாலே தான் அந்தப்பொருள் சிவப்பாக தெரிகிறது.

சிவப்பு காம உணர்வைத் தூண்டக்கூடிய சக்தி வாய்ந்த நிறம். அதே நேரத்தில் உடல் ஆரோக்கியத்திற்கு ஓரளவு சிவப்பு தேவைப்படுகிறது.

அதனாலே காவி உடை அணிந்தால் சூரியஒளி ஓரளவு சிவப்பை விலக்கிவிடும். அதாவது சிவப்பின் பலனும் கிடைத்துவிடும். சிவப்பின் கெடுதலும் இல்லை.

காவி உதய வேளையின் நிறம். கீழ் வானத்திலே கதிர் உதிக்கின்ற வேளையிலே முதல் ஒளி தோன்றுகின்ற நேரத்திலே காவி நிறம் தான் கசியும். தியானம் செய்யும்போது முதலில் காணும் ஒளி காவி நிறம்தான். தியானத்தின் உச்ச நிலையின் நிறம் நீலம்.

தியானம் காவி நிறத்தில் ஆரம்பமாகி நீல நிறத்தில் முடிவடைகிறது என்கிறார் ஓஷோ. நீலம் தியான சிகரம். காவி தியான ஆரம்பக் குறியீடு. ஒரு சந்நியாசியின் ஆரம்ப தரிசனம் என்கிறார் அவர்.

ஒருத்தர் நாள் பூராகவும் காவி உடையையே அணிந்திருந்தால் அந்த நிறம் அவருக்கு தியானத்தைப் பற்றிய நினைப்பை ஊட்டிக்கொண்டே இருக்கும். இப்படியே ஆடைக்கும் தியானத்திற்கும் இடையிலே ஒரு தொடர் ஏற்படுகிறது. ஒரு துறவியின் உள்ளார்ந்த பண்பாக அது மாறுகிறது.

கடை வீதியிலே ஒரு பொருள் வாங்கப் போகிறோம். அது மறந்து விடக் கூடாது என்பதற்காக ஞாபக முடிச்சுப் போட்டுக் கொள்கிறோம். அந்த முடிச்சுக்கும் பொருளுக்கும் தொடர்பில்லை. ஆனால் கடை வீதிக்கு போனவுடனே அந்த முடிச்சு அந்தப் பொருளை ஞாபகப்படுத்துகிறது. அந்த முடிச்சு ஒரு தொடர்பு அம்சமாக அமைகிறது.

அது மாதிரித்தான் காவி உடையும் ஒரு துறவி நடக்கும் போது, சாப்பிடும்போது, குளிக்கும் போது அவருடைய காவி உடை அவருக்கு ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கும். அது ஒரு நிலைப்படுத்தப்பட்ட நினைவாக ஞாபக முடிச்சாக மாறிவிடுகிறது.

காவி ஆடை இல்லையென்றால் ஒருத்தராலே துறவியாக முடியாது என்று அர்த்தமில்லை. அதேநேரத்தில் காவியாடையிலே அர்த்தமில்லை என்றும் சொல்ல முடியாது.

இவ்வளவு தூரம் காவி ஆடையைப் பற்றி சொல்வதனால் எல்லோரும் சந்நியாசியாப் போங்கள் என்று நான் சொல்வதாக யாரும் நினைத்து விடக் கூடாது. மனதுக்கும் நிறத்திற்கும் உள்ள சம்பந்தத்தைத் தெரிந்து கொள்வதற்காகத்தான் இவ்வளவும்.

எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் இருக்கின்றார். அலுவலகத்தில் வேலை பார்க்கிறவர். ஒவ்வொரு மாதமும் 20 ஆம் திகதிக்குப் பிறகு அவரைப் போய்ப் பார்த்தால் காவி உடை அணிந்து கொண்டு கண்ணை மூடிக் கொண்டு கை இரண்டையும் விரித்து வைத்துக் கொண்டு தியானத்திலேயே இருப்பார். ஏன் இப்படி செய்கின்றீர்கள் என்று கேட்டேன்.

அதாவது 20 ஆம் திகதிக்குப் பிறகு என் கையில் ஒரு பைசா கூட கிடையாது. ஒரு சந்நியாசி லெவலிலே இருக்கின்றேன். என்னிடம் எதுவும் செலவுக்கு கேட்காதே என்று என் மனைவிக்கு நாசூக்காக உணர்த்துவதற்காக அப்படி உட்கார்ந்திருப்பேன் என்று விளக்கம் கொடுத்தார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபை தேர்தலுக்கு முன் சட்டத்தில் திருத்தம் அவசியம்

(மட்டக்களப்பு)

மாகாணசபை தேர்தலை நடத்துவதற்கு முன்பாக அதில் திருத்தங்களை கொண்டு வருவதில் அவசியம் உள்ளதாக இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார். நேற்று மட்டக்களப்பில் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் அரசாங்கத்தின் தீர்மானத்தின் அடிப்படையில் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் சட்டத்தில் திருத்தங்களை செய்ய வேண்டிய தேவையுள்ளது.

என்ன திருத்தம் என்பது தொடர்பான பிரேரணையினை பாராளுமன்றத்தில் அரசாங்கம் முன்வைக்கின்றபோது அது தொடர்பில் பாராளுமன்றத்தில் எமது கட்சியின் உறுப்பினர்கள் கருத்துத் தெரிவிப்பார்கள்.

அவ்வாறான பிரேரணையொன்று கொண்டுவரப்படும் போது அது தமிழ் மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் இருக்க வேண்டும்.

அரசாங்கத்தினால் பாராளுமன்றத்தில் தீர்மானம் முன்வைக்கப்பட்டால் அது தொடர்பில் கட்சி ஆராய்ந்து அதற்கு ஏற்றாற்போல் தீர்மானம் எடுக்கும். தேர்தல் முறைமை என்பது கட்டாயமாக மாற்றப்பட



வேண்டும். மாகாணசபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்ற உறுதிப்பாடு இந்த அரசாங்கத்திற்கு இருக்க வேண்டும். ஐ.நா. மனித உரிமை பேரவையில் கூட அது சொல்லப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். (நி-4)

# கைதிகளும் மனிதர்களே புனர்வாழ்வு அவர்களுக்கும் தேவை

(கொழும்பு)

சிறைக்கைதிகளை பொது மன்னிப்பு அளிக்கும் கொள்கைத்திட்ட செயற்பாட்டுக் குழு அறிக்கையில் அரசியல் கைதிகளை விடுவிக்கும் விடயம் உள்வாங்கப்படவில்லை என நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

நாட்டிலுள்ள சிறைச்சாலைகளில் சிறைக்கைதிகள் அதிகரித்துள்ளதுடன், அங்கு நிலவி வரும் நெருக்கடித் தன்மையை குறைத்துக் கொள்வதற்காக விசேட பொறிமுறையின் ஊடாக பொதுமன்னிப்பு அளித்து விடுதலை செய்வதற்கான வேலைத்திட்டமொன்று சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக் கைதிகள் புனர்வாழ்வு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சராகவிருந்த வைத்தியர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே பதவிக் காலத்தில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்நிகழ்வு நேற்று முந்தினம் பிற்பகல் ராஜகிரியவிலுள்ள சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சில் நடைபெற்றது. இங்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர் அலி சப்ரி,

"சிறைச்சாலைகளில் சிறைக் கைதிகள் எண்ணிக்கை அதிகரித்துள்ள போதிலும் சிறைக் கைதிகளும் மனிதர்களே என்ற கோட் பாட்டின்படி அவர்களுக்கு புனர் வாழ்வளிக்க வேண்டும்.

அவர்கள் சமூகத்தினரால் ஒதுக்கப்படாது சமூகத்தினருடன் ஒன்றிணைந்து வாழ்வதை விரும்புகிறார்கள். விடுவிக் கப்பட்டவர்கள் சமூகத்துக்குள் விமர்சிக்கப்படாதிருக்க வேண்டும்" என அவர் தெரிவித்தார். (நி-4)

# கணனி சார்ந்த பட்டப்படிப்பு
## பத்தாயிரம் மாணவர்களுக்கு சந்தர்ப்பம்

(கொழும்பு)

கணனி தரவு அறிவியல் மற்றும் மென்பொருள் பொறியியல் தொடர்பான புதிய தொழில் வாய்ப்பு சார்ந்த பட்டப்படிப்புக்கு பத்தாயிரம் மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

2025 ஆம் ஆண்டுக்குள் தகவல் தொழில்நுட்பத் துறையில் 2 இலட்சம் மனித வளத்தை இணைத்துக் கொள்வதே இதன் நோக்கம் என்று இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கலாநிதி அஜித் ஜீ மதுரபெரும தெரிவித்தார். அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட ஊகவியலாளர் மகாநாட்டில் துணைவேந்தர் இதனை தெரிவித்தார்.

தற்போதைய தகவல் தொழில்நுட்பத் துறைக்கு ஏற்றவாறு கற்கை நெறி திருத்தப்பட்டுள்ளது. இதனை இணைய வழி தொழில்நுட்பத்தின் மூலம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த பட்டப்படிப்புக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் பணி ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதியுடன் நிறைவடைகின்றது. இதனை அடுத்த ஜூன் மாதம் முதல் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. விண்ணப்பங்களை www.ou.ac.lk/bsehons மற்றும் www.vgc.ac.lk. என்ற இணையத் தளங்களில் பதிவிறக்கம் செய்துக்கொள்ள முடியும். (நி-4)

# ரஞ்சனை சந்திக்க வாராந்தம் ஒருவர்

(கொழும்பு)

சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவைப் பார்வையிட வாராந்தம் ஒரு பார்வையாளருக்கு அதிகாரிகள் அனுமதி வழங்கியுள்ளனர்.

அத்தோடு சில நிபந்தனைகளின் கீழ் அவர் வாரத்திற்கு ஒரு முறை தொலைபேசியை பயன்படுத்தவும் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சிறைத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். (நி-4)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2270

**காறிலா**




**இளமாறன்**

எவ்வளவு படிச்சி என்ன பிரயோசனம்



என்னதான் பெரிய போன் வச்சிருந்தாலும் கைநாட்டு வச்சாத்தான் அன்லொக் பண்ண முடியும்...!

**தர்சனா**


புரிஞ்சிக்க யாருமே இல்லைனாலும்



தப்பாய் புரிஞ்சிக்க நம்மை சுத்தி ஒரு கூட்டமே காத்துக் கிடக்கும்... அதை நாமதான் புரிஞ்சிக்கனும்.

**வையோன்**

மரியாதை இல்லாத இடத்தில் கிடைக்கும் கறி சோற்றை விட...



அன்பு உள்ள இடத்தில் கிடைக்கும் கஞ்சி மேலானது....!

**துவாரகா**

மெல்ல மெல்ல ஏன்னா எனக்கு ரொம்ப குளிருது பாரு



வேகமா சுத்தி தொலைடா பரதேசி... பரதேசி!

**புகழ்**

என்னிடம் வரும் போது அழுது கொண்டேதான் வருகிறார்கள்...




என்னை விட்டு பிரிந்த பிறகும் என்னுடைய நினைவுகளால் அழுதுகொண்டே இருக்கிறார்கள்...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவைகளை www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தான்சானியா ஜனாதிபதியின் இறுதி ஊர்வலத்தில் சிக்கி 45 பேர் பலி



(டொடோமா)

தான்சானியா நாட்டின் ஜனாதிபதி ஜான் மகுஃபுலியின் இறுதிச் சடங்கில் ஏற்பட்ட சன நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 45 ஆக உயர்வடைந்துள்ளது.

61 வயதான ஜான் மகுஃபுலி, சிகிச்சை பலனின்றி கடந்த 17 ஆம் திகதி உயிரிழந்தார்.

இதனைத் தொடர்ந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை அவரது இறுதிச் சடங்குகள் இடம்பெற்றன.

இதன்போது, ஜான் மகுஃபுலிக்கு இறுதி மரியாதை செலுத்த ஆயிரக்கணக்கான மக்கள் கூடினர்.

இந்த நிலையில் சன நெரிசலில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை தற்போது 45 ஆக அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

# கொரோனாவின் ஆரம்பம் குறித்து விரிவான விசாரணை தேவை

## -டெட்ரோஸ் அதானோம்-

**(ஜெனிவா)**

**சீனாவில் - வுஹான் ஆய்வகத்தில் இருந்து கொரோனா வைரஸ் பரவியதாக எழுந்த குற்றச்சாட்டு தொடர்பாக விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டும் என உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் கேப்ரியேசிஸ் தெரிவித்துள்ளார்.**

கொரோனா வைரஸ் பரவல் குறித்து சீனாவில் ஆய்வு மேற்கொண்டு உலக சுகாதார அமைப்பின் நிபுணர் குழு அறிக்கை அளித்துள்ளது மிக முக்கியமான தொடக்கம் ஆனால் இது முடிவல்ல.

கொரோனா வைரஸ் எங்கிருந்து உருவாகியது? என்பது இதுவரை கண்டறியப்படவில்லை. இதுதொடர்பாக எந்தவொரு தகவலையும் விட்டு வைக்காமல் அறிவியலை பின்பற்றி விடை தேட வேண்டும் எனவும் டெட்ரோஸ் அதானோம் கேப்ரியேசிஸ் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தோற்றத்தைக் கண்டறிவதற்கு மேலும் சில காலம் ஆகும். இந்த



Dr Tedros Adhanom Ghebreyesus

வைரஸ் எங்கு உருவானது? என்பதைக் கண்டறிந்து உலகுக்குக் கூற உலக சுகாதார அமைப்பு கடமைப்பட்டுள்ளது.


அதன் மூலம் இதுபோன்ற நிகழ்வுகள் மீண்டும் நடைபெறுவதற்கான அபாயத்தை குறைப்பதற்கு ஒன்றிணைந்து நடவடிக்கை மேற்கொள்ள முடியும். ஒரேயொரு முறை மேற்கொள்ளப்பட்ட எந்த ஆய்வும் அனைத்துப் பதில்களையும் தராது.

கொரோனா வுஹான் நகரில் உள்ள விலங்குணவுச் சந்தையில் இருந்து பரவியதாக வெளியான தகவல்கள் குறித்து தெளிவின்மை நீடிக்கிறது.

ஆனால் அந்தச் சந்தையில் வைரஸ் பரவலுடன் சுகாதார சீர்கேடு நிலவியதை நிபுணர் குழு உறுதி செய்துள்ளது எனவும் உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் கேப்ரியேசிஸ் தெரிவித்துள்ளார். (நி-4)

# பிரதான இரு கட்சிகளை மாறி மாறி ஆட்சியில் அமர்த்துவது ஆட்சி மாற்றம் அல்ல

## சீமான் தெரிவிப்பு



(சென்னை)

ஆட்சி மாற்றம் என்பது இரண்டு பிரதான கட்சிகளையும் மாறி மாறி ஆட்சியில் அமர்த்துவது இல்லை என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

போரூரில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தொடர்ந்து தெரிவித்த அவர், "ஆட்சி மாற்றம் என்பது தி.மு.க.மற்றும் அ.தி.மு.க.ஆகிய கட்சிகளை மாறி மாறி ஆட்சியில் அமர்த்துவது அல்ல. அப்படி செய்வதால் ஆட்கள் மாறுவார்கள். ஆனால் நிர்வாகம் மாறாது.

கடந்த 50 வருடங்களாக செய்யாத நல்லதை 5 ஆண்டுகளில் எப்படி செய்வார்கள் என நம்புகிறீர்கள். கல்வி மானுட உரிமை. அதை கொடுப்பது அரசின் கடமை.

நான் வாக்குக்காக நிற்கவில்லை. நாட்டுக்காக நிற்கிறேன். அதிமுகவின் வெற்றி என்பது நிகழ்வு. நாம் தமிழர் கட்சியின் வெற்றி என்பது வரலாற்றின் மாபெரும் புரட்சி" எனத் தெரிவித்துள்ளார். (நி-4)

# 126 ஆவது நாளை கடந்த விவசாயிகள் போராட்டம்



(சென்னை)

வேளாண்மைச் சட்டமூலங்களுக்கு எதிராக விவசாயிகள் 126 ஆவது நாளாக தொடர்ச்சியாக போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

வேளாண் சட்டங்களை எதிர்த்து பஞ்சாப், அரியானா, பீகார் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

குறித்த சட்டமூலங்கள் தொடர்பில் பல சுற்றுப்பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற நிலையில், இதுவரை உடன்பாடு எட்டப்படவில்லை.

இந்நிலையில், இந்தச் சட்ட மூலங்களை மீளப் பெறும் வரை போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என விவசாயிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# தலை துண்டிக்கப்பட்டு வீதிகளில் வீசப்பட்ட சடலங்கள்

## ஐ.எஸ்ஸின் வெறிச்செயல்

(மபுடோ)

மொசாம்பிக் நாட்டில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் வெளிநாட்டினர் 50 பேரின் தலையைத் துண்டித்துக் கொலை செய்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மொசாம்பிக் நாட்டில் வெளிநாட்டவர்கள் மீது ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பு கொலை வெறித் தாக்குதல் நடத்தி உள்ளது. சுமார் 50 பேர்களின் தலையைத் துண்டித்துக் கொலை செய்துள்ளதாகத் தகவல் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த வெளிநாட்டவர்கள் 17 வாகனங்களில், வெளியேறிய நிலையில், அவர்கள் மீது ஐ.எஸ்.அமைப்பு சரமாரியான துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளது.

இதனையடுத்து பலரைப் பிணைக்கைதிகளாகப் பிடித்து வைத்து தற்போது அவர்களைக் கொடூரமாகக் கொலை செய்து உள்ளது தெரிய வந்துள்ளது. (நி-4)

# கொரோனாத் தாக்கம்; 15.5 மில்லியன் இழப்பு

## பிரான்ஸ் சுற்றுலாத்துறை

(பாரிஸ்)

கடந்த 2020 ஆம் ஆண்டில் பிரான்ஸ் தலைநகர் பாரிஸ், 15.5 பில்லியன் யூரோக்கள் வருவாய் இழப்பைச் சந்தித்துள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

பிரான்சுக்கான பிராந்திய சுற்றுலாத்துறை அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகையே முடக்கிய கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலால், பாரிஸுக்கான சுற்றுலாப்பயணிகளின் வருகை கடுமையாக வீழ்ச்சியடைந்தது.

இதனால், விமான போக்குவரத்துகள், தங்குமிடங்கள், உணவகங்கள் மற்றும் சுற்றுலாத்தலங்கள் வெறிச்சோடி காணப்பட்டன. இதற்கமைய பாரிஸ் 15.5 பில்லியன் யூரோக்கள் வருவாய் இழப்பை சந்தித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீண்டெழுந்த யாழ்ப்பாண பொதுசன நூலகம்

## 02 நூல்களிலிருந்து அதன் வரலாற்றுத் தேடல்



திருமதி.சுகந்தினி சதாசிவமூர்த்தி பிரதம நூலகர், யாழ்ப்பாணம் பொது நூலகம்

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

தீயில் எரிந்த திகதியை கூட சரியான முறையில் ஆவணப்படுத்த முடியாத காரணத்தினாலோ என்னமோ யாழ். பொது நூலக எரிப்பு தொடர்பாக இன்னுமொரு தரப்பினர் 1981 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி பின்னிரவில் நடைபெற்றதாக தெரிவிக்கின்றமையும் இவ்வேளையில் சுட்டிக் காட்டத்தக்கது. இப்படியான தவறுகள் வெளியிடப்பட்ட நூல்களில் இருப்பதாக மேற்கூறிய நூல்களில் ஒன்று சுட்டிக்காட்டியிருப்பதையும் காணலாம்.

**"உலகத்து மக்கள் எத்தனையோ எண்ணுகிறார்கள், சொல்லுகிறார்கள், செய்கிறார்கள். அதில் பெரும் பகுதி கவனிக்கப்படாமல் போகின்றது. கவனித்தவற்றுள் ஒரு பகுதிதான் நினைவில் இருக்கின்றது. நினைவில் இருப்பவற்றுள் ஒரு பகுதிதான் பதித்து வைக்கப்படுகிறது. பதித்து வைக்கப்பட்டவையுள் ஒரு பகுதி தான் எஞ்சியிருக்கிறது. எஞ்சியுள்ளவைகளில் வரலாற்று ஆசியரியர்களுக்குத் தெரிந்தவை ஒரு பகுதி தான். அதிலும் ஒரு பகுதி தான் நம்பகமாக உணரப்படுகின்றது. உணரப்பட்டவைகளில் ஒரு பகுதிதான் முறையாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன. அதாவது நமக்கு கிடைத்துள்ள தகவல்கள் மிகச் சுருக்கமானவை" - இவ்வாறு அறிவியல் மேதை லூயி கோட்சாக் கூறியிருந்தார். இதுபோலவே கிட்டத்தட்ட 88 வருட வரலாற்றை கொண்ட யாழ்ப்பாணம் பொதுநூலகம் பற்றி ஒவ்வொருவருக்கும் தெரிந்தவை மிகச் சுருக்கமானவை.**

"உலகத்து மக்கள் எத்தனையோ எண்ணுகிறார்கள், சொல்லுகிறார்கள்,செய்கிறார்கள். அதில் பெரும் பகுதி கவனிக்கப்படாமல் போகின்றது. கவனித்தவற்றுள் ஒரு பகுதிதான் நினைவில் இருக்கின்றது. நினைவில் இருப்பவற்றுள் ஒரு பகுதிதான் பதித்து வைக்கப்படுகிறது. பதித்து வைக்கப்பட்டவையுள் ஒரு பகுதிதான் எஞ்சியிருக்கிறது. எஞ்சியுள்ளவைகளில் வரலாற்று ஆசியரியர்களுக்குத் தெரிந்தவை ஒரு பகுதிதான். அதிலும் ஒரு பகுதிதான் நம்பகமாக உணரப்படுகின்றது. உணரப்பட்டவைகளில் ஒரு பகுதிதான் முறையாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன. அதாவது நமக்கு கிடைத்துள்ள தகவல்கள் மிகச் சுருக்கமானவை" இவ்வாறு அறிவியல் மேதை லூயி கோட்சாக் கூறியிருந்தார். இதுபோலவே கிட்டத்தட்ட 88 வருட வரலாற்றை கொண்ட யாழ்ப்பாணம் பொதுநூலகம் பற்றி ஒவ்வொருவருக்கும் தெரிந்தவை மிகச் சுருக்கமானவை.

அதுபோலவே எமக்குக்கிடைத்த தகவல்களும் சுருக்கமானவை. எமக்குக் கிடைத்தவற்றை தொகுத்து வழங்குவதே இக் கட்டுரையின் நோக்கம். ஈழத்தமிழர்களின் அறிவுப் பொக்கிஷமாக இன்றும் நிமிர்ந்து நிற்கும் யாழ். பொது நூலகத்தின் எரிப்பு தொடர்பாக கவனம் செலுத்துவதற்கு முன்பு, குறித்த நூலகம் எத்தனை பேரின் முயற்சியின் பலனாக உருவாக்கப்பட்டது, எத்தனை இடர்பாடுகள், நெருக்கடிகளுக்கு மத்தியில் வளர்க்கப்பட்டது என்பது குறித்து கவனம் செலுத்துவது அவசியம் ஆகிறது. எமது கட்டுரைத்தொகுப்பின் கூடுதலான விடயங்கள், மேற் கூறப்பட்ட நூல்களிருந்தும் இணையத் தளங்களிலிருந்தும் எடுக்கப்பட்டவையே. அந் நூல்களின் ஆசிரியர்களுக்கும் அந் நூல்களுக்கும் இணையத்தளங்களுக்கும் ஆக்கங்களைக் கொடுத்து உதவியவர்களுக்கும் எமது உள்ளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு எமது கட்டுரையை ஆரம்பிக்கின்றோம்.

1981க்கு முன்னைய கால நூல் நிலைய வரலாற்றை எழுதுவதற்கு எமக்குப் பெரிதும் துணை புரிந்த நூல் "யாழ்ப்பாண நூல் நிலையம் ஓர் ஆவணம்"என்ற நூலாகும். இவ் வரலாற்று நூலை எழுதியவர் யாழ்ப்பாண பொதுசன நூலகத்துடன் இரண்டறக் கலந்து வாழ்ந்த காலஞ்சென்ற மூதறிஞர் க.சி. குலரத்தினம் இந் நூல், அவர் இறந்த பின், 1997இல் வெளிவந்தது.

இந் நூல் பற்றிய விமர்சனம் லண்டனில் வாழ்ந்தாலும் யாழ் நூலக வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்ட என். செல்வராஜாவினால் "புதினம்" இணையத்தில் நவம்பர் 1997இல் எழுதப்பட்டிருந்தது. அவ்விமர்சனம் என்.செல்வராஜா அவர்களால் 2001இல் வெளியிடப்பட்ட "யாழ்ப்பாணப் பொது நூலகம்- ஒரு வரலாற்றுத்தொகுப்பு" என்னும் நூலில் மீள்பதிவு செய்யப்பட்டுள்ளது.

எம்மால் தொகுக்கப்பட்டுள்ள இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள 1981க்கு முந்திய தகவல்களில் பெரும்பாலானவை" யாழ்ப்பாண நூல் நிலையம் ஓர் ஆவணம்" என்னும் நூலில் இருந்து எடுக்கப்பட்டவையே.

**இக் கட்டுரையில் 1981க்கு முன்னைய கால நூல் நிலைய வரலாற்றை எழுதுவதற்கு எமக்குப் பெரிதும் துணை புரிந்த நூல் "யாழ்ப்பாண நூல்நிலையம்-ஓர் ஆவணம்" என்ற நூலாகும். இவ் வர லாற்று நூலை எழுதியவர் யாழ்ப்பாண பொதுசன நூல கத்துடன் இரண்டறக் கலந்து வாழ்ந் தகாலஞ் சென்ற மூதறிஞர்திருக.சி. குலரத்தினம் இக்கட்டுரையில்குறிப்பிட்ட 1981க்கு முந்திய தகவல்கள் பெரும்பாலானவை இவர் நூலில் இருந்து எடுக்கப்பட்டவையே.**

### மூதறிஞர் க.சி.குலரத்தினம் எழுதிய"யாழ்ப்பாண நூல் நிலையம் - ஓர் ஆவணம்"பற்றி........

மூதறிஞர் க.சி.குலரத்தினம் 1982 இல் ஈழநாடு பத்திரிகையில் தொடர்ந்து எழுதிய கட்டுரைகளின் தொகுப்பே "யாழ்ப்பாண நூல் நிலையம் - ஓர் ஆவணம்" என்னும் நூலாகும். மூதறிஞர் க.சி.குலரத்தினம் 1994 இல் காலமானார். இந் நூல், இத் தலைப்பில் யாழ்ப்பாண பொது நூலக முன்னாள் நூலகரான காலஞ்சென்ற கலாநிதி வே.இ. பாக்கியநாதனினால் பதிப்பிக்கப் பெற்று 1997 இல் வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

மூதறிஞர் க.சி.குலரத்தினம்



காலஞ்சென்ற மூதறிஞர் திரு க.சி. குலரத்தினம்

எழுதிய "யாழ்ப்பாண நூல் நிலையம் - ஓர் ஆவணம்"பற்றி கூறுமுன் அவரைப் பற்றி சில வரிகள்.

மூதறிஞர் க.சி.குலரத்தினம் (1916.10.10 - 1994.02.06) யாழ்ப்பாணம், கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆசிரியர். பள்ளிக் காலத்தில் எழுத்தாற்றல் மிக்கவராக விளங்கிய இவர், மெற்றிக்குலேசன் பரீட்சையில் சித்தி பெற்றுக் கொழும்பு மாவட்டக் கச்சேரியில் இரண்டா [illegible]ராகப் பணியாற்றிப் [illegible] 1944 ஆம் ஆண்டு தொடக்கம் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையிடம் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்று, 1944 ஆம் ஆண்டு தொடக்கம் யாழ். பரமேஸ்வராக் கல்லூரியிலும் கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் கால் நூற்றாண்டு காலம் ஆசிரியராகப் பணியாற்றித் தனது ஐம்பதாவது வயதில் ஓய்வு பெற்றார்.மில்க் வைற் செய்தி சஞ்சிகையின் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். இவர் பல நூல்கள் எழுதியுள்ளார்.

யாழ்ப்பாணப் பொது நூலகம் பற்றி மூதறிஞர் க.சி.குலரத்தினத்தின் "யாழ்ப்பாண நூல் நிலையம் - ஓர் ஆவணம்" என்னும் நூலிற்கு முன்னீடு எழுதிய எஸ்.பொ. யாழ்ப்பாண நூல் நிலையம் பற்றி பின்வருமாறு கூறுகிறார்.

யாழ்ப்பாண நூல் நிலையம் அறிவுப்பசி கொண்டோர்க்கு உணவளிக்கும் பண்டகசாலையாக மட்டும் உருவாக்கப்படவில்லை. வயோதிபர்களுக்கான பொழுதுபோக்கு நிலையமாகவும், முதுமாணிப் பட்டம் பெறுவதற்கான உபகார சாலையாகவும் மட்டுமே அது நிறுவப்படவில்லை. அமெரிக்க காங்கிரசின் நூல்நிலையம், பிரிட்டிஷ் மியூசிய நூலகம், ரஷ்யாவின் லெனின் நூலகம் ஆகியவற்றைப் போல, ஈழத்தமிழருக்கான ஒப்பற்ற தேசிய நூலில் நூல்நிலையம் ஒன்றினை கட்டி எழுப்புதல் வேண்டும் என்கிற கனவுகளை குழைத்து உருவாக்கியது மட்டுமல்ல சமுதாய ஒன்றுகூடலாகவோ, ஞானப் பகிர்வின் மையமாகவோ மட்டும் அது எழுந்ததில்லை. இவை அனைத்துக்கும் மேலான ஆலயம், மதம் சார்ந்த ஆலயங்களிலும் பார்க்க உயர்ந்த "பெரிய கோயில்"

யாழ்ப்பாண நூல் நிலையம் மீண்டும் பழைய மகோன்னத நிலை அடைந்து, ஞானத் தேடலை இறைவழிபாடாகத் தரிசிக்கும் ஈழத்தமிழர்கள், அச்சமின்றிச் சர்வ சுயாதீனத்துடன் அந்த ஆலயத்தில் வழிபடும் உரித்தாளிகளாக எப்பொழுது மாறுகின்றார்களோ அப்பொழுதுதான் அவர்களுடைய மனங்களில் வடிந்து கொண்டிருக்கும் ரத்தக்கண்ணீர் வற்றும். அதுவரையிலும் யாழ்ப்பாண நூல் நிலையம் தட்டிய மான்மியம் தலைமுறை தலைமுறையாக நினைவு கூரப்படவேண்டும். இத்தகைய நினைவஞ்சலி இறைவழிபாட்டின் பாற்படும். இவ்வாறு அந் நூலின் முன்னீட்டில் எஸ்.பொ எழுதியுள்ளார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50 மில்லியன் நிதி மோசடி; சிரேஷ்ட அதிகாரி பணி நீக்கம்


(கொழும்பு)

பேராதனைப் பல்கலைக் கழகத்துடன் இணைந்த விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவனத்தினால் பேணப்பட்டு வந்த நிலையான வைப்புக் கணக்குகளில் 50 மில்லியன் ரூபாய் நிதி முன்னாள் சிரேஷ்ட உதவி நிதி அதிகாரி ஒருவரால் மோசடியான முறையில் பெற்றுக் கொள்ளப்பட்டிருப்பதாக பாராளுமன்றத்தின் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு தெரிவித்துள்ளது.

இந்த நிதி மோசடியுடன் தொடர்புபட்ட அதிகாரி பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருப்பதுடன், இது தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் ஊடாக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (நி-4)

# ஆலய வழிபாடு

## ஏன்–எதற்கு – எப்படி



## ஆன்மிக முன்னேற்றம் தரும் விரதம்

(தொடர்ச்சி)

வெள்ளிக்கிழமை அம்மனையும் அம்மனின் அவதாரங்களையும் வழிபட்டு விரதம் இருக்கலாம். சனிக்கிழமை பெருமாள், ஆஞ்சநேயர், காளிதேவி, சனி பகவான் ஞாயிற்றுக்கிழமை சூரிய பகவானை நினைத்து விரதம் இருந்து வரம் பெறலாம்.

மாத விரதம் என்பது நட்சத்திர விரதமாகும். ஆண்டு விரதம் என்பது திதியைக் கணக்கிட்டு கடைப்பிடிக்கும் விரதமாகும். ஒவ்வொரு விரதத்துக்கும் எத்தகைய உணவுப் பழக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற விதி முறைகள் உள்ளன.

முழுப் பட்டினி கிடந்து விரதம் இருப்பது ஒரு வகை பழ ஆகாரம் (பலகாரம் அல்ல) மட்டும் எடுத்துக் கொண்டு விரதம் இருப்பது மற்றொரு வகையாகும்.

பழ ஆகாரம் என்பது பழ வகைகள் மட்டும் கொஞ்சமாகச் சாப்பிடுவதாகும். பழ ஆகாரம் அதிக வலு இல்லாதது. பழ ஆகாரம் மட்டும் சாப்பிட்டு விரதம் இருந்தால் வயிற்றில் உள்ள பழைய கழிவுகள் அனைத்தும் வெளியில் வந்து விடும் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த விரதத்தை நாம் ஆன்மிகத்தோடு இணைக்கும்போது அது பக்தியின் படி நிலைகளில் முதன்மையானதாக மாறுகிறது.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் இறைவழிபாடுகளில் நாம் கொண்டுள்ள பக்தியை முழுமை அடையச் செய்வதே இத்தகைய விரதம்தான். அதிலும் விரதம் இருக்கும் நாட்களில் மனதை ஒரு முகப்படுத்தித் தியானத்தைக் கடைப்பிடித்தால் அது முக்திப் பாதைக்கு நம்மை முன்னேற்றும் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

எனவே விரதம் என்பது புனிதமானது. விரதங்களினால் நம் ஆன்மா உறுதித் தன்மையைப் பெறுகிறது. விரதம் மூலம் நாம் வயிற்றுக்கும் இரைப்பைக்கும் ஓய்வு கொடுப்பதால் உடலும் உள்ளமும் புத்துணர்ச்சி பெறும்.

அதோடு விரத தினத்தன்று ஆலயத்துக்குச் சென்று இறை வழிபாட்டில் கவனம் செலுத்தினால் முழுப் பலனும் கிடைக்கும். விரதம் இருக்கும் தினத்தன்று அதிகாலையிலேயே எழுந்து காலைக் கடன்களை முடித்து விட்டு, குளித்து, சுத்தமான ஆடை அணிந்து, ஒரு பாத்திரத்தில் தண்ணீரை நிரப்பி அருகில் வைத்துக் கொண்டு எந்தக் கடவுளை நோக்கி என்ன விரதம் இருக்கப் போகிறோம் என்பதை உச்சரித்துச் சங்கல்பம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

இறுதியில் கருவறை முன்பு நின்று "உன்னை சரண் அடைய இன்று இந்த விரதம் இருக்கிறேன். என் குறைகளைத் தீர்க்க வேண்டும்" என்று வேண்டிக் கொள்ள வேண்டும். பிறகு வீடு திரும்பி விரதம் மேற்கொள்ள வேண்டும். இறை நாமத்தை உச்சரித்தபடி இருத்தல் வேண்டும்.

மாலை உண்ணாவிரதத்தை நிறைவு செய்யும்போது மீண்டும் ஆலயத்துக்குச் சென்று சுவாமிக்கு அபிஷேக ஆராதனை செய்து வழிபட வேண்டும். அப்போது இறைவனுக்கு உகந்த மலர்களால் அர்ச்சிக்க வேண்டும்.

அந்தத் தெய்வத்துக்குப் பிடித்த நைவேத்தியத்தைப் படைக்க வேண்டும். இப்படி ஆன்மிக உணர்வுடன் இருக்கும் விரதம் வெற்றி பெறுகிறது. திருமணத்தடை நீங்கும். குழந்தை பாக்கியம் கிடைக்கும்.

பொதுவாகச் சாப்பிடும் 6 மணி நேரத்துக்குள் மீண்டும் சாப்பிட்டால் பழைய உணவு கொழுப்பு சக்தி ஆற்றலாக மாறாமல் கெட்ட கொழுப்பாக மாறித் தேங்கி விடும். வாரம் ஒரு முறை விரதம் இருந்தால் கொழுப்புத் தேங்கும் பிரச்சினையே வராது. முகம் பளிச்சென பிரகாசமாக மாறும்.

விரதத்தால் மனதின் செயல் குறைந்து தூய்மை பெறும். மனம் தூய்மையானால் தானாகவே ஆன்மிக முன்னேற்றம் ஏற்படும். இதற்கு விரதம் இருக்கும் மன வைராக்கியம் தேவை.

அதற்காக முழுப் பட்டினி கிடக்க வேண்டியதில்லை. முழுப் பட்டினியானது நீர் வறட்சியை ஏற்படுத்தி விடும். சர்க்கரை அளவு உயர்ந்து விடும். இதைத் தவிர்க்க விரதத்தின் இடையிடையே தண்ணீர் அல்லது பழரசம் அருந்தலாம்.

விரதம் இருக்கும்போது இறை சிந்தனையுடனே இருங்கள். பேசுவதைக் குறையுங்கள். இறை நாமத்தை உச்சரித்துக் கொண்டே இருங்கள். மனப்பூர்வமாக விரதம் இருங்கள். நிச்சயமாக இறைவன் உங்கள் வாழ்வில் மங்களத்தை ஏற்படுத்துவார். (முற்றும்)

# செய்தித்துளிகள்

## வீதி விபத்துகளில் சிக்கி 18 பொலிஸார் உயிரிழப்பு

(கொழும்பு)

இந்த ஆண்டின் கடந்த சில மாதங்களில் பதிவான வீதி விபத்துகளில் 72 பொலிஸார் காயமடைந்துள்ளதுடன் 18 பொலிஸார் உயிரிழந்துள்ளதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார். (நி-4)

## 300 கிலோ ஹெரோயினுடன் 6 மீனவர்கள் கைது

(கொழும்பு)

சுமார் 300 கிலோ கிராம் ஹெரோயினுடன் இலங்கை மீனவர்கள் 6 பேர் மினியோக் தீவுக்கு அருகில் இந்திய கடலோர பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்திய கடலோர காவற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பொன்றில் இலங்கைக்குச் சொந்தமான மீன்பிடி படகொன்று சுற்றிவளைக்கப்பட்டது.

அதனைச் சோதனையிடும் போது 300 கிலோ கிராம் ஹெரோயினுக்கு மேலதிகமாக ரஷ்ய உற்பத்தியான ஐந்து **AK 47** ரக துப்பாக்கிகளும் அதற்குப் பயன்படும் 1000 துப்பாக்கி ரவைகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக இந்துஸ்தான் டைம்ஸ் தெரிவித்துள்ளது. (நி-4)

## போலி நாணயத்தாள்களுடன் இருவர் கைது

(கொழும்பு)

கொழும்பு, புளூமெண்டல் பகுதியில் ஏழு போலி 5 ஆயிரம் ரூபா நாணயத்தாள்களுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவ்வாறு கைதான நபர்கள் வெல்லம்பிட்டி மற்றும் கொழும்பு 15 பகுதியைச் சேர்ந்தவர்கள் என ஆரம்பக் கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அண்மைக் காலங்களில் போலி நாணயத்தாள்கள் மீட்கப்பட்டுள்ளமையினால் பொதுமக்கள் இப்பண்டிகைக் காலங்களில் மிகவும் அவதானத்துடன் செயற்படுமாறும் பொலிஸார் எச்சரித்துள்ளனர். (நி-4)

# சந்தைகளில் நேற்றைய விலை


| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 130 | 120 | 200 |
| உருளைக்கிழங்கு | 110 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 140 | 160 | 200 |
| தக்காளி | 100 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 50 |
| கோவா | 100 | 90 | 120 |
| கரட் | 180 | 180 | 200 |
| பூசணி | 70 | 60 | 80 |
| புடோல் | 120 | 80 | 120 |
| வாழைக்காய் | 70 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 160 | 140 | 200 |
| பெரிய வெங்காயம் | 90 | 90 | 100 |
| பாகற்காய் | 250 | 200 | 240 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 160 |
| கருணைக் கிழங்கு | 140 | 120 | 160 |
| பயற்றங்காய் | 160 | 120 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 100 | 80 | 100 |
| கறிமிளகாய் | 160 | 160 | 200 |
| முருங்கைக்காய் | 700 | 600 | 800 |
| போஞ்சி | 160 | 180 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 160 |
| கீரை - 1 பிடி | 50 | 40 | 40 |
| தேசிக்காய் | 140 | 100 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 75 | 60 | 60-80 |
| இராசவள்ளி | 260 | 200 | 240 |
| வெங்காயப்பூ | 160 | 140 | 280 |
| முள்ளங்கி | 50 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 |
| வல்லாரை | 80 | 20 | 30 |
| ஈரப்பலா | 100 | 60 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## சத்தியமே வெல்லும்



அதற்குள் ஒருவன் எழுந்து, "பிரபு! தாவூத் இன்று தாமதமாக வருவதற்குத் தங்களிடம் அனுமதி கோரியுள்ளார்!" என்றார்.

"தாமதமாக வர என்ன காரணம்?" என்று அக்பர் கேட்டார்.

"ஒரு பயங்கரமான குற்றத்தை தன் கண் முன்னே நடக்கக் கண்டார். இதனால் அவருடைய உடல் சோர்ந்து விட்டது. ஆகையால் சிறிது தாமதமாக வருவதாகக் கூறியுள்ளார்!" என்றார் அவர்.

சற்றுநேரத்தில் தாவூதே வந்து சேர்ந்து விட்டார். உடனே அக்பர் அவரைப் பார்த்து, "ஒரு பயங்கரமான குற்றம் நிகழ்வதை நீ பார்த்தாயாமே!" என்று கேட்டார்.

"ஆம் பிரபு!" என்றார் தாவூத். "அது என்ன குற்றம்? உடனே சொல்! யார் அந்தக் குற்றவாளி?" என்று அக்பர் சீறினார்.

"அதை எப்படி என் வாயால் சொல்வேன் பிரபு? உங்களுடைய மிகுந்த நம்பிக்கைக்கும், அபிமானத்திற்கும் பாத்திரமான அவரைப் பற்றி என் வாயினால் எப்படிச் சொல்வேன் பிரபு? அதைக் கேட்டால், உங்கள் மனம் மிகவும் புண்படுமே!" என்று தாவூத் நாடகமாடினார்.

"சட்டத்தின் முன் அனைவரும் சமம்! அவன் யாராயிருந்தாலும் சரிதான்! அவன் யாரென்று உடனே சொல்!" என்று அக்பர் உறுமினார்.

"வேறு யாருமில்லை பிரபு! உங்களுடைய பீர்பால்தான் அது!" என்றதும் அக்பர் அதிர்ச்சியுற்றார். பீர்பாலும் அதிர்ச்சியுற்றார். ஆனால் பீர்பால் உடனே விடயத்தைப் புரிந்து கொண்டார். தன் மீது வீண் பழி சுமத்த தாவூத் திட்டமிட்டுள்ளார் என்று தெரிந்து விட்டது.

"என்ன பீர்பாலா?" என்று மிகுந்த வியப்புடன் அக்பர் கேட்டார்.

"ஆம், பிரபு! நான் என் கண்களினால் கண்டதைச் சொல்கிறேன்! நேற்று மாலை நான் வீடு திரும்பிக் கொண்டிருக்கையில், எனக்கு சற்றுத் தொலைவில் பீர்பால் வந்து கொண்டு இருந்தார். திடீரென அவர் குனிந்து தரையில் கிடந்த ஒரு தங்க மாலையை எடுத்தார்.

பிறகு தன்னை யாராவது கவனிக்கிறார்களா என்று சுற்று முற்றும் பார்த்தபின், மாலையைத் தன் பையில் போட்டுக் கொண்டு சென்று விட்டார்.

சிறிது நேரங்கழித்து அங்கு மிகுந்த பதற்றத்துடன் வந்த ஓர் இளைஞன் "என் தங்க மாலை வழியில் இங்கே எங்கோ விழுந்து விட்டது.

அதைப் பார்த்தீர்களா?" என்று எல்லோரையும் கேட்டுக் கொண்டிருந்தான். அவனிடம் உண்மையைச் சொல்ல நினைத்தேன்.

(தொடரும்)

# மகாபாரதம்




விதியின் வலிமையை உணர்ந்த தருமர் "மதியினும் விதி பெரிது. பிறர் செய்யும் கர்மப்பயனும் நம்மை வந்து அடைவதுண்டு.

ஆகவே விதி இச் செயலுக்கு என்னை தூண்டுமானால் அதைத் தடுக்க என்னால் முடியுமா?" என்று சூதுக்கு இணங்கினார்.

சூதாட்டம் தொடங்கியது. தாயம் [illegible] ட்டப்பட்டது. விதுரரைப் போன்றோர் மௌனியாகினர்.

"பந்தயம் என்ன?" என்றார் தருமர். "அளவிலா செல்வம் என்னி[illegible] ங்கு நீ வைத்தால் ஒன்பது மடங்கு நான் வைப்பேன்" என்றான் துரியோதனன். "ஒருவர் ஆடப் பணயம் வேறொருவர் வைப்பதா?" என்றார் தருமர்.

"மாமன் ஆடப் பணயம் மருமகன் வைக்கக் கூடாதா? இதில் என்ன தவறு?" என எதிர்வாதம் புரிந்தான் சகுனி.

பரபரப்பான ஆட்டத்தில் படிப்படியாக ஏராளமான பொருட்களை இழந்தார் தருமர்.

மாடிழந்தார், மந்தை மந்தையாக ஆடிழந்தார், ஆளிழந்து விட்டார். நாடிழக்கவில்லை தருமா. நாட்டை வைத்து ஆடு" என்று தூண்டினான் சகுனி.

சூதாட்டத்தை நிறுத்த விதுரர் எவ்வளவோ முயன்றார். "சந்திர குலத்திலே பிறந்த நாமா இந்த தீய செயலைச் செய்வது. இன்று பாண்டவர் பொறுமை காக்கின்றனர். குலம் அழிவெய்த விதி துரியோதனனைப் படைத்துள்ளது.

குலம் முழுவதும் துரியோதனன் என்னும் மூடனுக்காக அழிய வேண்டுமா? என்றவர் திருதராட்டிரனை நோக்கி "சூதாட்டத்தில் துரியோதனன் வெற்றிகண்டு மகிழ்கிறாய். கற்ற கல்வியும் கேள்வியும் கடலிற் காயம் கரைத்தது போல் ஆயிற்றே.

வீட்டுக்குள்ளேயே நரியையும் விஷப் பாம்பையும் பிள்ளைகளாய் வளர்த்திட்டோம். சாகும் வயதில் தம்பி மக்கள் பொருளை விரும்புகிறாயா? "நாட்டைத்தா" எனக் கேட்டிருந்தால் தந்திருப்பார்களே அப்படியிருக்க சூதாட்டத்தை நிறுத்துவாயாக" என வேண்டினார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே ஒரு வளம் தான் உலகில் இருக்கிறது – அது உண்மை
ஒரே ஒரு வறுமை தான் உலகில் இருக்கிறது – அது பொய்
உண்மையை அறிந்து உண்மையாக வாழுங்கள்!
–ஓஷோ ரஜனீஷ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஈழத் தமிழர் என்றால்... யுத்தமும் பாதிப்பில்லை! கொரோனாவும் பிரச்சினையில்லை!

இலங்கை ஆட்சியாளர்கள் நடுநிலை தவறியவர்கள் என்பதை சிங்கள மக்கள் எவரும் மறுதலிக்க முடியாது.

அந்தளவுக்கு அன்று தொடக்கம் இன்று வரை சிங்கள ஆட்சியாளர்களிடம் இனம், மொழி, மதம் சார்ந்த பக்கச்சார்பும் ஓரவஞ்சகமும் இருந்து வருவது தெரிந்த உண்மை.

ஆட்சியாளர்கள் எப்போதும் நடுநிலை உடையவர்களாக – தம் நாட்டு மக்கள் அனைவரையும் சமகண் கொண்டு பார்க்கின்றவர்களாக இருக்க வேண்டும் என்பதுதான் அரச தர்மம்.

எனினும் அந்தத் தர்மம் இலங்கையில் இம்மியும் இல்லை என்பதை அறுதியிட்டுக் கூற முடியும்.

அறத்தின் வழி நின்று ஆட்சி செய்யும் போதுதான், நாடும் நாட்டு மக்களும் உயர்வு பெறுவர்.

ஆனால் அந்த உயர்வு நம் இலங்கை மண்ணுக்கு இல்லை என்றாயிற்று.

அந்தளவுக்கு அரச தர்மம் அடியோடு மீறப்பட்டுள்ளது.

அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாம் என்பது சிலப்பதிகாரத்தின் அறிவுரைப்பு.

இதுபற்றி ஆட்சியாளர்களுக்கு எடுத்துரைக்க வேண்டிய மதத் தலைவர்கள் கடவுள் நீதியை மறந்து, அதர்மத்தின் வழியில் பயணிக்கின்றனர்.

நிலைமை இதுவாக இருக்கையில், இலங்கைத் தீவு உய்யும் வழி ஏதேனும் உண்டா? என்றால் இல்லை என்பதுதான் பதிலாக இருக்கும்.

இவை ஒருபுறமிருக்க, யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்று பெரிய பிரச்சினையாக இல்லை என அமைச்சரவை இணைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள கொரோனா பெரும் பிரச்சினையல்ல என்ற அமைச்சரவைப் பேச்சாளரின் அறிவிப்பில் யாருக்குப் பிரச்சினையில்லை என்பதை அவர் கூறாமல் விட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

உண்மை, ஈழத் தமிழ் மக்கள் யுத்தத்தின் கொடுமையை அனுபவித்தபோது, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டபோது, கொரோனாவால் பீடிக்கப்பட்டபோது, என எப்போதெல்லாம் கஷ்டப்பட்டனரோ – துன்பப்பட்டனரோ அப்போதெல்லாம் இலங்கை ஆட்சியாளர்களுக்குப் பிரச்சினை இல்லை என்பதுதான் அவர்களின் வாக்குமூலமாக இருந்துள்ளது.

அந்த அடிப்படையில்தான் யாழ்ப்பாணத்தைச் சூழ்ந்துள்ள கொரோனாத் தொற்றும் அரசாங்கத்துக்குப் பிரச்சினை இல்லை.

என்ன செய்வது கொரோனாத் தொற்றினால் திருநெல்வேலி பாற்பண்ணை பகுதி முடக்கப்பட்டு அப்பகுதி மக்கள் நாளாந்த தொழிலை இழந்திருக்கின்ற நிலைமையில், யாழ்ப்பாணம் மற்றும் திருநெல்வேலி வர்த்தகர்கள் கடைகளை மூடிவிட்டு; வங்கிக் கடனை அடைப்பதற்கு ஏங்கி நிற்கின்ற வேளையில், எங்கள் அமைச்சரவைக்கு இது எதுவுமே பிரச்சினையில்லையாம்.

அட, பிரச்சினையில்லை என்றால்தான் யாழ்ப்பாணத்தாருக்கு நிவாரணம் வழங்க வேண்டியிராது என்றால், அதை அவர்கள் சொல்வதில் ஆச்சரியம் இல்லைத்தானே!

# கடனுக்கு ஒதுக்கி வைத்த லொத்தர் சீட்டில் அதிர்ஷ்டம்

(கொழும்பு)

தென்னிலங்கையில் இளைஞன் ஒருவரினால் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட லொத்தர் சீட்டிற்கு கிடைத்த பணப்பரிசு அவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பிட்டிகல தலகஸ்பே பகுதியில் லொத்தர் சீட்டினை விற்பனை செய்த பெண் தொடர்பில் தகவல் வெளியாகி உள்ளது.

நாளாந்தம் லொத்தர் சீட்டுகள் பலவற்றை ஒதுக்கிக்கொள்ளும் இளைஞன்வழமையைபோன்று தனக்கு 5 லொத்தர் சீட்டினை ஒதுக்கி வைக்குமாறு விற்பனை செய்யும் குறித்த பெண்ணிடம் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இறுதியாக ஒதுக்கிய லொத்தர் சீட்டுகளை பெறுவதற்கு அந்த இளைஞன் வருகை தராமையினால் ஒதுக்கப்பட்ட லொத்தர் சீட்டிற்கு பரிசு கிடைத்துள்ளதா என குறித்த பெண் சோதனையிட்டுள்ளார்.

அவ்வாறு ஒதுக்கப்பட்ட லொத்தர் சீட்டு ஒன்றிற்கு ஒரு இலட்சம் ரூபாய் பணம் கிடைத்துள்ளது. உடனடியாக குறித்த இளைஞனுக்கு தொலைபேசியில் அழைப்பேற்படுத்திய பெண் தகவலை வெளியிட்டுள்ளார்.

அது மாத்திரமின்றி கிடைத்த பணத்தை உடனடியாக அவருக்கு பெற்றுக் கொடுக்கவும் அந்த பெண் நடவடிக்கை எடுத்துள்ளார்.

பரிசு வென்ற இளைஞன் மிகவும் மகிழ்ச்சியுடன் லொத்தர் சீட்டு விற்பனை செய்யும் பெண்ணுக்கு 5ஆயிரம் ரூபாய் பணத்தை பரிசாக கொடுத்துள்ளார்.

"என்னிடம் லொத்தர் சீட்டு பெற்றவர்களுக்கு பரிசு கிடைத்தால் அவர்களுக்கு அதனை பெற்றுக் கொடுப்பது எனது கடமை என லொத்தர் சீட்டு விற்பனையாளரான வஜித மல்லிக்கா என்ற பெண் தெரிவித்துள்ளார். (ம-3)

## யாழ்.பருத்தித்துறையில்

# சுகாதார நடைமுறையை மீறிய திருமண மண்டபத்திற்கு சீல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கொரோனா தொற்று அதிகரித்துள்ள நிலையில் திருமண நிகழ்வுகளை மண்டபங்களில் நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டிருக்கின்றது. இந்நிலையில் யாழ்.பருத்தித்துறை - கரணவாய் பகுதியில் திருமண மண்டபத்திற்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.

கரணவாய் மூத்த விநாயகர் மண்டபத்தில் சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை மீறி திருமண நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த விடயம் கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினருக்கு தெரியப்படுத்தப்பட்டிருந்த நிலையில்,

குறித்த மண்டபத்தில் திருமண நிகழ்வு நடைபெறுவதை தடுத்து நிறுத்திய அதிகாரிகள், திருமண மண்டபத்திற்கு சீல் வைத்துள்ளனர்.

இதேவேளை யாழ். மாவட்டத்தில் கொரோனா தொற்று அதிகரித்தமையைத் தொடர்ந்து

கல்யாண மண்டபங்கள் மற்றும் இறுதிச் சடங்குகள் என்பவற்றிற்கு பங்குபற்றுவோரின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுடன் பொதுச் சுகாதார பரிசோதகர்களின் அனுமதிகள் பெறப்பட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில்

# நீதிபதி, சட்டத்தரணிகள், அலுவலர்கள் உட்பட சகலருக்கும் பிசிஆர் பரிசோதனை

(யாழ்ப்பாணம்)


பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் நீதவான் மற்றும் சட்டத்தரணிகள் மற்றும் நீதிமன்ற அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை பருத்தித்துறை சுகாதார பிரிவினரால் இந் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 24ஆம் திகதி P2P தொடர்பான வழக்கு விசாரணைகள் இடம்பெற்றிருந்த நிலையில் கொரோனா தொற்றுக்குள்ளான யாழ்.மாநகர முதல்வரும், சட்டத்தரணியுமான வி.மணிவண்ணனும் கலந்து கொண்டிருந்ததன அடிப்படையில்,

நீதிபதி, சட்டத்தரணிகள், நீதிமன்ற அலுவலர்கள், பணியாளர்களுக்கு இந்த பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. (ம-3)

# சத்திய தரிசனம்



## தர்மம் என்றும் காக்கும்

- ❖ உடல் என்னும் கருவியைச் செம்மையாக வைத்திருக்க உணவு, உடையை தூய்மையாக வைத்திருங்கள்.
- ❖ மனம் என்னும் கருவியைத் தூய்மையாக்க எண்ணத்தை ஒழுங்குபடுத்துங்கள்.
- ❖ முற்பிறவியின் பயனாக நம்மைத் தொடரும் பாவச்சுமையை, இன்றைய வாழ்வின் நற்செயல்களால் மட்டுமே போக்க முடியும்.
- ❖ நாம் கடவுளின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அதனால், நம் தந்தையான கடவுளின் அன்புப் பிணைப்பை உறுதியாக்கிக் கொள்ள வேண்டும்.
- ❖ பயணம் செய்யும் போது வெறுமனே வேடிக்கை பார்க்காதீர்கள். கடவுளின் திருநாமத்தை ஜெபித்துக் கொண்டிருங்கள்.
- ❖ செல்வம், அதிகாரம், ஆடம்பரம் ஆகியவை ஒருநாள் நம்மை விட்டுக் காணாமல் போய்விடும். ஆனால், செய்த தர்மமோ என்றும் அழியாமல் நம்மைக் காக்கும்.
- ❖ சமைக்கப்[illegible] எரிபொருள் தேவையில்லை. அதுபோல, வாழ்வின் உண்மையை உணர்ந்[illegible] பயிற்சிகள் தேவைப்படுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் பேருந்து சாலைக்கு அரச அதிபர் திடீர் விஜயம்



(மன்னார்)

இலங்கை போக்குவரத்து சபையின் மன்னார் சாலைக்கு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமேல் நேற்று புதன்கிழமை காலை திடீர் விஜயம் ஒன்றை மேற் கொண்டார்.

அரச போக்குவரத்து சபையின் மன்னார் சாலையில் உள்ள பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக மன்னார் சாலை அதிகாரிகள் அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டு வந்தனர். குறிப்பாக பழுதடைந்த் பேருந்துளை திருத்துதல், பேருந்தின் இருக்கைகளை சீர் செய்தல் போன்ற வேலைத்திட்டங்கள் தாமதமாகுவதாகவும், மன்னாரில் சில வேலைத்திட்டங்களை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுவதோடு, அதற்கான செலவீனங்களை உரிய நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

மேலும். 2014 ஆம் ஆண்டிற்கு பின்னர் மன்னார் சாலைக்கு புதிய பேருந்துகள் வழங்கப்படாத நிலை காணப்படுவதாகவும், தற்போது உள்ள பேருந்துகளை வைத்தே போக்குவரத்து சேவைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

எனவே மன்னார் சாலையில் உள்ள பிரச்சினைகளை பூர்த்தி செய்து தருமாறு கோரிக்கை விடுத்தனர். இவ்விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்று நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அரசாங்க அதிபர் தெரிவித்தார். (5-4-285)

# இரணைமடுக்குளத்தின் கீழ் பயிர்ச் செய்கைக்காக நீர் திறந்து விடப்பட்டது


(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசன குளமான இரணைமடுக் குளத்தின் கீழ் இவ்வாண்டு 16 ஆயிரத்து 610 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கையும் 500 ஏக்கர் நிலப்பரப்பில் உப உணவு பயிர்ச்செய்கையும் மேற்கொள்வதற்கான கூட்ட தீர்மானங்கள் மாவட்ட அரச அதிபர் தலைமையில் நிறைவேற்றப்பட்டு விவசாய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் நேற்றைய தினம் கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் நீர் வைபவ ரீதியாக திறந்து வைக்கும் நிகழ்வு நடைபெற்றது. கிளிநொச்சி கனகாம்பிகை அம்மன் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து குளத்தின் நீர் திறந்து விடப்பட்டது.

இதில் மாவட்ட பிரதி நீர்ப்பாசன பொறியியலாளர் ராஜகோபு, நீர்ப்பாசனப் பொறியியலாளர் செந்தில் குமரன் மற்றும் விவசாய சம்மேளனத்தின் தலைவர் முத்து சிவமோகன், விவசாயிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (5-4-315)

# தபாலகங்கள் பூட்டு பொதுமக்கள் சிரமம்



(முறிகண்டி)

தபாலகங்கள் திறக்கப்படாமையால் நேற்றைய தினம் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர். ஒரு நாள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள தபாலகங்கள் நேற்று பூட்டப்பட்டன.

ஆயினும் உப தபால் அலுவலகங்கள் வழமை போன்று இயங்குகின்றன.

இதனால் தபால் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ள வேண்டிய சேவைகளை பெற்றுக்கொள்ள முடியாது மக்கள்சிரமங்களைஎதிர்கொண்டனர்(5-4-100)



Northern Eagles Distributor வியாபார நிறுவனம் மற்றும் கோப்பாய் சுப்பிரமுனிய கோட்டம் என்பன இணைந்து நடத்திய இரத்ததான முகாம் நிகழ்வு கடந்த சனிக்கிழமை கோப்பாய் பழைய வீதியில், அமைந்துள்ள கோப்பாய் சுப்பிரமுனிய கோட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

(படம்:-ரவிசாந்)

# 15 லீற்றர் கசிப்புடன் இருவர் கைது



(தருமபுரம்)

புதுக்குடியிருப்பில் இருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த தனியார் பேருந்தில் 15 லீற்றர் கசிப்பைப் பயணப் பொதியில் மறைத்து வைத்த நிலையில் இரண்டு சந்தேக நபர்கள் தரு மபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் விசாரணைகள் மேற் கொள்ளப்பட்ட பின்னர் பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். (5-4-316)

# அடிப்படை வசதிகளின்றி அல்லலுறும் கிராமங்கள்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைதிபுரம் மற்றும் ஆரோக்கியபுரம் ஆகிய கிராமங்களில் 138 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் போக்குவரத்து மற்றும் அடிப்படை வசதிகளை பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக கிராம மட்ட அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மிகவும் பின்தங்கிய பிரதேசமாக காணப்படுகின்ற அமைதிபுரம், ஆரோக்கியபுரம் ஆகிய கிராமங்களில் தற்போது 138 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன .

இவ்வாறு தங்களுடைய பிரதேசத்தில் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் தாங்கள் வாழ்ந்து வருகின்ற போதும் தங்களுடைய கிராமங்கள் இதுவரை அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்படாத நிலையில் காணப்படுவதாகவும் கிராம மட்ட அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.(5-4-315)

# இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டில் கிராம உத்தியோகத்தர் கைது

(நெளுக்குளம்)

வவுனியா கோவில்குளம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் க்டமையாற்றும் கிராம உத்தியோகத்தர் நேற்று அவரது அலுவ லகதில் வைத்து இலஞ்ச ஊழல் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு கொழும்பிற்கு அழைத்து செல்லப்பட்டுள்ளார் .

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில் , வவுனியாவில் கடமையாற்றும் கிராம உத்தியோகத்தரை அவரது அலுவலகத்தில் வைத்து இலஞ்ச ஊழல் அதிகாரிகளால் இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் மேலதிக விசாரணைகளுக்காக கொழும்பிற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-4-299)



**இலங்கை நிப்போன் கல்வி மற்றும் கலாசார மையம் மற்றும் யாழ்.பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தலைமையகமும் இணைந்து யாழ்.மாவட்ட மாணவர்களுக்கு ஜப்பானிய வளர்ப்புத் தாய்,தந்தையரின் புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வானது கடந்த 28 ஆம் திகதி யாழ்ப்பாணம் ஸ்ரீ நாக விகாரையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் ஸ்ரீ நாக விகாரையின் விகாராதிபதி பண்டிதர் மீகஹயன்துரே சிறிவிமல தேரர், 523 ஆவது தரைப் படைப்பிரிவின் மக்கள் தொடர்பாடல் அதிகாரி, கட்டளை அதிகாரி ஆகியோர் கலந்து கொண்டனர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தண்ணீர்...

யில் நேற்று புதன்கிழமை முற்பகல் இடம் பெற்ற இச்சம்பவத்தில் முறாவில், புலோலி தெற்கைச் சேர்ந்த முருகமூர்த்தி யோகேஸ்வரி (வயது - 60) என்பவரே உயிரிழந்துள்ளார்.

வீட்டில் இருந்து குடி தண்ணீர் எடுப்பதற்காக சென்ற அவர் குடிதண்ணீர் எடுத்துவிட்டு மீண்டும் வீட்டுக்கு திரும்பும் வழியில் வீதியில் மயங்கி விழுந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

அவரை உடனடியாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்த போதும் அவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-3,60)

## ஒரு கோடி...

நிலைய பொறுப்பதிகாரி அசோகரட்ணத்தின் அறிவுறுத்தலில் மதுவரிப் பரிசோதகர் வசீகரனின் தலைமையில் மல்லாகம் மற்றும் பருத்தித்துறை மதுவரி நிலைய அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் நேற்று முன்தினம் மாலை முன்னெடுத்த சிறப்பு சுற்றி வளைப்பு நடவடிக்கையின்போது சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து உயிர்க்கொல்லி போதைப்பொருளான ஹெரோயின் ஒரு கிலோ கிராம் கைப்பற்றப்பட்டது. அதன் பெறுமதி சுமார் ஒரு கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. (ம-3,33,60,104)

## மறுஅறிவித்தல்...

சாலைகள் மறுஅறிவித்தல் வரும்வரை தொடர்ந்தும் மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் அதிகமான நபர்களிடம் பி.சி.ஆர் மாதிரிகளை எடுத்ததற்கு காரணம் கொரோனாவின் பரம்பல் தீவிரம் எவ்வாறு இருக்கின்றது என்பதை கண்டறிவதற்காகவே.

இதன்மூலம் கிடைக்கப்பெற்ற முடிவுகளின் பிரகாரம் இதனை கட்டுப்படுத்தப்படக்கூடிய சூழ்நிலை காணப்படுகின்றது.

எனவே மக்கள் தேவையற்ற அச்சத்தை தவிர்த்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம் என தெரிவித்தார். (ம-3,33)

## ரூ.46 இலட்சம்...

செவ்வாய்க்கிழமை மாலை மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட கேரள கஞ்சா பொதிகள் 46 கிலோ கிராம் எடை கொண்டது என பொலிஸார் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சா பொதிகள் சுமார் 46 இலட்சம் ரூபாய் பெறுமதியானது என தெரிய வருகின்றது. எனினும் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மேலதிக விசாரணையின் பின் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3,285)

## யாழில் மார்ச்...

நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.நகரப்பகுதில் கொரோனா பரம்பல் அதிகரித்ததையடுத்து வர்த்தக நிலையங்களையும் சந்தை தொகுதியையும் மூடியிருந்தோம்.

அதற்கு பின்னர் கடந்த ஞாயிறு மற்றும் திங்கள் குறித்த வர்த்தக நிலையங்கள் மற்றும் சந்தை தொகுதியில் பணியாற்றுகின்றவர்களுக்கான பி.சி.ஆர் மாதிரிகளை எடுத்திருந்தோம்.

குறிப்பாக 1440 பேரிடம் பி.சி.ஆர் மாதிரிகள் எடுத்திருந்தோம். அவர்களில் இதுவரை 35 பேருக்கு மாத்திரமே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாநகர சந்தை தொகுதியில் 117 பேர் இதுவரை கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அத்தோடு இரண்டு வாரங்கள் முடிவடைந்ததும் முடக்கப்பட்ட பகுதிகளில் மீண்டும் பி.சிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படும் என்றார். (ம-3,33)

## மணிவண்ணனை...

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் அறிவித்தது.

இதற்கு எதிராக யாழ்.மாவட்ட நீதவான் நீதி மன்றத்தில் வி.மணிவண்ணன், பா.மயூ ரன் தாக்கல் செய்த மனுவையடுத்து, அவர்களை கட்சியை விட்டு நீக்கும் முடிவிற்கு இடைக்கால தடைவிதிக்கப்பட்டது.

இந்தத் தடைக்கு எதிராக, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியினர் மாகாண குடியியல் மேல் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தனர்.

மாவட்ட நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட இடைக்கால தடையை செல்லுபடியற்றதாக்க கோரியிருந்தனர். இந்த மனுவை மாகாண குடியியல் மேல் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது. (ம-3,33)

## யாழில் மேலும்...

துவபீட ஆய்வு கூடங்களில் ஆயிரத்து 297 பேரின் மாதிரிகள் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

அவர்களில் 38 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்கள் 862 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் 21 பேருக்கு தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 4 பேருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 6 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இருவருக்கு தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஒருவர் மருதனார்மடம் பொதுச் சந்தை வியாபாரி. ஏனைய ஒருவர் தொற்றாளருடன் நேரடித் தொடர்புடையவர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் நேற்று அறிகுறிகளுடன் சேர்க்கப்பட்ட 5 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்களில் மூவர் தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்டவர்கள். மேலும் இருவர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைக்கு வந்தவர்கள்.

யாழ்ப்பாணம் மாநகர வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்கள் 541 பேரின் மாதிரிகள் முல்லேரியா ஆய்வுகூடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அவற்றில் 13 பேருக்கு தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ம-3,18,33)

## பண்டி...

கடந்த ஒக்ரோபர் மாதத்தின் பின்னர் 807 தொற்றாளர்கள் மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டிருக்கின்றனர்.

இதனையடுத்து 1220 குடும்பங்கள் தனிமைப் படுத்தப்பட்டுள்ளன. மேலும் 469 பேர் சிகிச்சை பெற்று வெளியேறியுள்ளனர்.

இதேபோல் யாழ். மாவட்டத்தில் ஒரு சில நாட்களின் பின்னர் மீண்டும் அதிகரித்த கொரோனா நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர்.

தற்போது மாவட்டத்தில் தொற்றாளர் எண்ணிக்கை ஓரளவு ஆறுதலளிக்கும் வகையில் குறைந்திருக்கின்றது.

அதனைத் தொடர்ந்தும் தக்கவைப்பதற்கு பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும். பண்டிகைக் காலத்தில் தேவையற்ற நடமாட்டத்தை தவிருங்கள் எனவும் மாவட்ட செயலர் கேட்டுள்ளார். (ம-3,18,33)

## வெளிநாட்டிலி...

கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்த 41 வயதான சந்தேகநபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, குறித்த நபரின் தனியார் வங்கிக் கணக்கொன்றுக்கு வெளிநாட்டிலிருந்து ஒரு கோடியே 34 இலட்சத்திற்கும் மேற்பட்ட பணத் தொகை கிடைக்கப் பெற்றுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ம-3,18,33)

## 2 பேர் பலி...

றுக்கு உள்ளாகி மேலும் 2 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

அதன்படி, நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 568 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)


தன நிதானய
திகதி - 31/03/2021 | சீட்டிழுப்பு இலக்கம் - 480
Z 41 46 68 81
3 4 5 7

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 31.03.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2738
ஆங்கில எழுத்து S வெற்றி இலக்கங்கள் 19 51 59 80

மஹஜன சம்பத
திகதி 2021/03/31
சீட்டிழுப்பு இலக்கம் 4443
Y 1 0 6 1 7 5

மெகா பவர்
திகதி 31/03/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0804
F 23 01 11 26 48

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 31/03/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1109
கும்பம் 6 1 8 7 5 2
மகரம் 13332

சீட்டிழுப்பு வாரம் 065
சீட்டிழுப்பு திகதி 31.03.2021
வெற்றி இலக்கங்கள் 02 05 31
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,592,440

அத கோடிபதி
கிழமை புதன்கிழமை
சீட்டிழுப்பு இல: 1239
வர்ணம் இளஞ் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 31.03.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 123,606,935
வெற்றி இலக்கங்கள் 08 18 23 57 H

சனிதா
கிழமை புதன்
சீட்டிழுப்பு இல: 3569
சீட்டிழுப்பு திகதி 31.03.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 34,304,271
வெற்றி இலக்கங்கள் 24 29 55 71 M

சுப்பர் ஜக்பொட் 2,474,490/=
திகதி: 31.03.2021
வெற்றி வாரம்: 3120
வர்ணம்: பச்சை
வெற்றி இலக்கங்கள் 20 42 52 55 மிதுனம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 11,716,940

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1413 நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 31/03/2021 தினம் புதன்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் Q 18 26 51 67
அடுத்த சுப்பர் ஜக்பொட் 51,932,906=

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1746
சீட்டிழுப்பு திகதி 31.03.2021
வெற்றி இலக்கங்கள் 18 47 53 69 B
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 23,771,892
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசும் எதிர்க்கட்சியும் ஒன்றிணைந்து ஜெனிவா சிக்கலுக்கு தீர்வுகாண வேண்டும்

## இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த

(கொழும்பு)

ஜெனிவா விவகாரத்திற்கு தீர்வு காண அரசாங்கமும், எதிர்க்கட்சியும் ஒன்றினைந்து செயற்பட வேண்டும். இவ்விடயம் குறித்து அனைத்து அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தையினை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இலங்கை குறித்து 2009 ஆம் ஆண்டு தொடக்கம் சமர்பிக்கப்பட்டுள்ள அறிக்கைகள் அனைத்தும் மீள்பரிசீலனை செய்யப்படும் என தொலைநோக்கு கல்வி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

ஜெனிவா விவகாரம் தொடர்பில் அரசாங்கம் முன்னெடுக்கவுள்ள அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் குறித்து வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இலங்கை விவகாரம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட 46.1 பிரேரணை இலங்கையின் இறையாண்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் பல விடயங்களை உள்ளடக்கியுள்ளது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் தொடர்பில் பல போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளமை இலங்கை மக்களின் மக்களாணைக்கு முரணானது.

வெளிநாடுகளில் உள்ள இலங்கைக்கான இராஜதந்திரிகள் தொடர்பில் தற்போது மாறுப்பட்ட பல கருத்துக்கள் குறிப்பிடப்படுகின்றன. இவ்விடயம் குறித்து வெளிவிவகார அமைச்சு உரிய கவனம் செலுத்தும். இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை இரு வேறுப்பட்ட கொள்கைகளை கடைப்பிடிக்கின்றமை ஐக்கிய நாடுகள் சபையின் தோற்ற கொள்கைக்கு முரணாக அமைந்துள்ளது என்றார். (ம-03)

**சமையல் வெற்றிடம்**

யாழ். மற்றும் வடமராட்சி உணவுகளை தரமாக சமைக்கக் கூடியவருக்கு எமது உயர்தர உணவகத்தில் வெற்றிடம் உண்டு. (C-1855)

**யாழ் பாடி**

**077 736 0353**

**மோட்டார் சைக்கிள் தேவை**

ஸ்கூட்டி (scooty) ரக நல்ல நிலையில் உள்ள மோட்டார் சைக்கிள் உடனடியாகத் தேவை. (C-1855)

**077 290 5795**

**வீடு வாடகைக்கு**

கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்த கற்பக விநாயகர் கோவில் பின் வீதியில் உள்ள வீடு வாடகைக்கு உண்டு. சகல வசதிகளும் உண்டு.(2 அறை, சமையலறை, 2 ஹோல், அத்துடன் பயனுள்ள மரங்களும் உண்டு நல்ல சுற்றாடல்.) (6364)

**☎-077 516 2288**

**பெயர் மாற்றம்**

முதலிகோவில் வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில் எனும் முகவரியில் வசிக்கும் திவ்யா ஜெகத்குருதாஸ் (NIC - 937843100V) ஆகிய நான் எனது பெயரை டிவ்யா ஜெகத்குருதாஸ் என மாற்றியுள்ளேன். இனி வரும் காலங்களிலும் டிவ்யா ஜெகத்குருதாஸ் எனப் பயன்படுத்துவேன் என இத்தால் அறியத் தருகின்றேன். (6420)

டிவ்யா ஜெகத்குருதாஸ்

**விரைவு பொதிகள் சேவை**

**V2 TRAVELS**

**UK-1000/=Kg**

பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-1841)

**0768226240** DHL

**அண்ணா** EXPRESS Courier Services

விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள்

லண்டன் 1000/= 070 3305500 077 888 9388 (C-1768)

976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை

15,000 /- பெறுமதி வரை காப்புறுதி இலவசம்

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)

**உடனடி வேலை வாய்ப்பு**

நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் **V2 TRAVELS** (C-1807)

எமது கிளைகள்: கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை, கோப்பாய், புத்தூர்

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 15'000/-
பயிற்சியின்போது - 10'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

0777-068-777
v2vacancies@gmail.com

**யாழ் கிளை தற்காலிக இடமாற்றம்**

**V2 TRAVELS**

விரைவு பொதிகள் சேவை

COVID-19 யாழ் நகர முடக்கம் காரணமாக

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். இல் இயங்கிவந்த எமது யாழ் கிளை மறு அறிவித்தல் வரை

College Of International Migration Skills
49A, சப்பல் வீதி
யாழ்ப்பாணம்
(யாழ் பொது நூலகம் அருகில்)
இல் இயங்குகிறது

(C-1807) 0768226241


# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 02.03.2021 (செவ்வாய்க்கிழமை) அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்.

அமரர்

## அரியரத்தினம் கந்தசாமி

( கந்தசாமி அன் சன்ஸ் உரிமையாளர் )



கள்ளமற்ற மனமும் களங்கமற்ற அன்பும்
கொண்ட நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
எத்தனை ஆண்டு சென்றாலும் உங்கள் நினைவுகள்
எங்கள் மனதை விட்டு நீங்காது.

வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (01.04.2021) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. எனவே அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசி, கண்ணீர் அஞ்சலி, மலர் வளையம், பதாதைகள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் சிற்றுண்டிகள் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தோற்றம் 09.08.1946

மறைவு 02.03.2021

மாளியாவத்தை,
சங்கானை.
077 339 3372 (6414)

கந்தசாமி அன் சன்ஸ் குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.04.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.